9—3—58 | வார வெளியீடு | விலை 16காசு

நாமோ பலர்! அவர்களோ சிலர்!

அமைதி கொஞ்சும் அடர்மிகு காடென
நிலைத்த தன்மையாய் நிற்பீ ருறுதியாய்!
வன்மைசேர் கரமே யாயினும் வைப்பீர்
கட்டியே! கண்களோ தோல்வி காணுக்
கணைக ளாகட்டும் கொடுங்கோலர் துணிந்தால்
கொண்டு வரட்டும் குதிரைகள் தம்மை!
அறைதலோ அரிதலோ குத்தலோ வெட்டலோ
அவர்தம் எண்ணம் போலேயெதையு மாற்ற
விடுவீர்! கோபத் தீயின் சுடர்மிகு
கொழுந்து தணியு மட்டும் கொல்லட்டும்!
அச்சமோ துச்சமென ஆச்சரிய மகற்றி
பார்த்தே யிருப்பீர் பயமும் வேண்டாம்
வெட்கத் தோடுதிரும் புவர்வீடு; நாம்
கொட்டும் குருதியே கொடுக்கும் நாணத்தை
இன்றேல் எண்ணத் தொலையா தொகையாய்
விழித்தெழும் சிங்கமென வீறுகொண் டெழுங்கள்
பிணித்துள விலங்கினைப் பெயர்த் தெறியுங்கள்
தீரர் சூழ் கூட்டமே
நாமோமிகு பலரவர் களோமிகு சிலர்தாமே!!

கரந்தை—கணேசன். (மூலம்: ஷெல்லி)

அவர் ஒரு 'பச்சைத் தமிழர்'!!

'நல்லது செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாமல் இருந்தால் அதுவே பெரிய உதவி செய்ததுபோல் ஆகும்' என்று யாராவது சிலரிடத்தில்சொல்லத் தோன்கிறதல்லவா! அவர்கள் யாரோ செய்கின்ற நல்ல செயல்களையும் மேல்விழுந்து தடுத்துக் கெடுப்பதைப் பழக்கமாகக் கொண்டுவிடுகின்றார்கள்.

சென்னை அரசினரின் போக்கு பல வேளைகளில் நமக்கு இதனைத் தான் நினைவுபடுத்துகின்றது.

சாதிகள் ஒழியவேண்டும்—சாதி அமைப்புகள் மனித இனத்தின் வளர்ச்சிக்கே கேடு சூழுகின்றன என்பதை இன்று மறுப்பார் இல்லை. எந்த அரசியல் கட்சியினரும் சமுதாயச் சீர்திருத்தம் விரும்புகின்றவர்களும் சாதிவேறுபாடுகளால் ஏற்படும் இன்னல்களை எடுத்துப் பேசி சமுதாயத்தில் சமநிலை ஏற்படவேண்டும் என்று வாதிக்கின்றனர்.

காங்கிரஸ் கட்சியும் சாதிவேறுபாடுகளைக் களைவதைத் தன் கொள்கைகளுள் ஒன்றாக அமைத்துக் கொண்டிருக்கிறது.

நேரு பண்டிதரும் சாதியை ஒழிக்கவேண்டியது எவ்வளவு முக்கியமான பிரச்சினை என்பதைப் பலமுறை எடுத்துச் சொல்லிவிட்டார்.

ஆனால் இன்னமும் சாதி இருந்து கொண்டுதான் இருக்கிறது. உள்ளத்தில் அந்த உணர்ச்சி வேர்விட்டு இருப்பதோடு, வெளியிலும் அதன் கோலம் வியாபார நிலையங்களிலும், பெயர்ப் பலகைகளிலும் நிலைத்து நிற்கின்றது. இந்த இடத்தில் இன்ன பொருள் விற்கப்படும், விற்பவர் இன்னார் என்று மட்டும் இல்லாமல் சிற்றுண்டிக் கடைகளிலும் வேறு பிற பொது இடங்களிலும் சில சாதிகளின் பெயர்கள் இருப்பது மறையவேண்டிய சாதிகளுக்கு உயிர் ஊட்டுவது போல் இருக்கிறது, என்றும் அதை அழித்து விடவேண்டும் என்றும் பெரியார் இயக்கம் தொடங்கியதை நாடு அறியும். அந்த இயக்கம் ஒருபுறம் இருக்க வேறு சிலர் இந்த இழிநிலையைத் துடைத்திடுவதின் இன்றியமையாமையை உணர்ந்தனர்.

கேரள மாநிலத்தில் சாதிப் பெயர்கள் கொண்ட பெயர்ப் பலகைகள் பொது விற்பனை நிலையங்களில் இருத்தல் கூடாது என்று கேரள அரசு ஆணை பிறப்பித்தது.

சென்னை சட்டமன்றத்தில் ஒருவர் இந்த முறை சென்னையிலும் பின்பற்றப்படுமா என்று கேட்ட போது அரசாங்கம் அந்தப் பிரச்னையைத் தட்டிக்கழித்து விட்டது.

ஆனால் தமிழ் நாட்டில் உள்ள பல நகர மன்றங்களும் ஊராட்சி மன்றங்களும் சாதிப் பெயர் பொறித்துள்ள உணவு விடுதிகள், விற்பனை நிலையங்கள் முதலியவற்றிற்கு உடன்பாடு(லைசென்ஸ்)தரக் கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றி அனுப்பின. நகர மன்றங்கள் செய்யும் எந்த முடிவும் அரசினரின் ஆணை பெற்றுத்தான் நடைமுறைக்கு வர இயலும்.

சென்னை அமைச்சர் அவையினர் தாங்களாகவே இத்துறையில் முன் நின்று முன்னேற்றமான வழியில் நடந்திருக்க வேண்டும். நல்லது செய்திருக்க வேண்டும். ஆனால் தாங்கள் செய்யத் தவறியதோடு மட்டும் அல்லாமல், நகர மன்றங்களின் தீர்மானத்திற்கும் உயிர் அளிக்க மறுத்துவிட்டதின் மூலம் மாபெருந் தவறு ஒன்றினைச் செய்திருக்கின்றனர். நல்லது செய்தல் பொறுத்திடுதற்கரிய பெருங் குற்றம் என்று கருதியோ என்னவோ நகர மன்றங்கள் அனுப்பிய தீர்மானத்தை ஏற்று நடைமுறைக்குக் கொண்டு வர மறுத்துவிட்டது.

அதிலும் வியப்பு விளைக்கக் கூடிய செயல் அந்த மறுப்புக்கு அவர்கள் தந்துள்ள காரணமாகும்.

ஜாதி வித்தியாசம் ஒழிய வேண்டியதுதான். ஆனால் பலகைகளிலிருந்து ஜாதிப் பெயர்களை எடுத்துவிடுவதாலேயே அந்த இலட்சியம் ஈடேறிவிடாது என்று சர்க்கார் 'கருதுகின்றதாம்.'

'நாங்களும் சாதி ஒழிய வேண்டும் என்று கருதுகின்றவர்கள் தான்' என்று 'விவே'க விளக்கம் தருகின்றனர். சாதி ஒழிய வேண்டும் என்று உண்மையிலேயே கருதுகின்றவர்களாக இருந்தால் இவர்களாக அந்த முயற்சியில் ஈடுபடவேண்டும். அப்படி ஈடுபடாதது மட்டும் அன்றி ஈடுபட்டுத் தீர்மானம் நிறைவேற்றியவர்களையும் அலட்சியப் படுத்துவதுபோல் அந்தத் தீர்மானத்தை ஒப்புக்கொள்ளாமலும் அதற்கு உயிர் அளிக்காமலும் இருக்கின்றனர்.

அதற்கு அவர்கள் தரும் விளக்கத்தில் உள்ள "எடுத்து விடுவதாலேயே" என்ற சொற்றொடர் உண்மையிலேயே ஊன்றிக் கவலிக்க வேண்டியதாகும். சாதிப் பெயர் பெயர்களை எடுத்து விடுவதாலேயே சாதி வேறுபாடுகள் ஒழிந்துவிடாது என்று கூறுவதினால் எடுத்து விடுவதும் ஒரு வழி என்பதை அவர்களே ஒப்புக்கொள்ளுகின்றனர். 'சாதி வேறுபாடுகள் ஒழிய வேறு எத்தனையோ வழிகள் இருக்கின்றன. அதிலே பெயர்ப் பலகைகளில் அவற்றை அழிப்பதும் ஒன்று. இந்த ஒன்றினால் மட்டும் சாதி

(15-ம் பக்கம் பார்க்க)

வரவு செலவு

மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [9—3—58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 34

வரவு செலவு பற்றிய வெறும் புள்ளி விபரங்களை, நிதியமைச்சர்களாயிருப்பவர்களால் ஆண்டாண்டுதோறும் காட்ட முடிகிறதே ஒழிய; புது ஒளி பூத்த கண்கள் எத்தனை, வாழ்வில் வளம் கண்ட மக்கள் எத்தனை பேர், வயிறார உணவு பெற்றோர் தொகை எவ்வளவு வளர்ந்திருக்கிறது, எத்தனை தலைகள் இந்த ஆண்டில் எண்ணெயைக் கண்டன, சமுகத்தின் பஞ்சமாபாதகங்கள் எனப்படுபவை எவ்வளவுதூரம் குறைந்திருக்கின்றன, என்பதற்கான விபரங்களை எடுத்துக்காட்ட முடிவதில்லை! மத்ய சர்க்காரிலும் சரி, மாகாண சர்க்கார்களிலும் சரி, புதுவரிகள் போடாமல் விட்டோம் என்கிற திருப்தியைப் பெறும் நோக்கம் இருக்கிறதே ஒழிய, பொதுவாக நாட்டின் பொருளாதாரத்தை எந்தத் திசையில் திருப்பிச் செல்கிறோம் என்கிற தெளிவினைக்காண முடிவதில்லை!! நேரு அவர்கள், சீமான்களுக்கு அதிக வரிபோடும் கொள்கையையே சர்க்கார் தொடர்ந்து செய்யும் என்று முழக்குகிறார் பார்லிமெண்டில். டாடாவின் இரும்பாலைப் பொன் விழாவில் போய்க் கலந்துகொள்ளும் போதோ, நாட்டின் முன்னேற்றத்துக்குத் தனியார் துறை மிகமிக முக்கியம்—தனியார் துறையும் பொதுத்துறையும் இரண்டு கண்களைப் போல என்று புகழ்கிறார். அதாவது மானும் உலவவேண்டும், புலியும் உலவவேண்டும் என்கிறார்! அப்படி இரண்டும் உலவவேண்டுமென்பதால்தான், 'முந்திரா'வும் 'டால்மியா'வும் உருவாகிறார்கள் என்பது அவர் அறியாததல்ல!! பாங்க்—உற்பத்தி—வர்த்தகம் இம் மூன்றும், பணம் படைத்தோரின் ஆட்டக் காயாக இருக்கும் வரையில், முதலாளித்துவத்தை அசைக்க முடியாது. நேருவோ, முதலாளி—பாட்டாளி, இருவரும் வாழும் 'திரிசங்கு சொர்க்கம்' நிறுவுவதாகப் பேசுகிறார்! தெளிவில்லை, அவரிடம்!! அந்த நேரு என்ன தருவார் என்பதை வைத்தே திட்டங்கள் போடவேண்டிய நிலையிலிருக்கும் மாநில அரசும், அதையொட்டியே தனது 'வரவு செலவை'க்காட்டுகிறதே ஒழிய, நிமிர்ந்து நின்று பட்டியல் தரும் கட்டத்தில் இல்லை!!

எனவே, வழக்கம்போல, டில்லியும் சரி, தமிழகமும் சரி, சென்ற கிழமையில் தந்திருக்கும் "பட்ஜட்"டில், புதுமையுமில்லை; புரட்சி மணமுமில்லை.

வருவதைக்கொண்டு சரிக்கட்டி ஆள்வோம் என்கிறார் அமைச்சர் சுப்ரமணியம்! வருவது இவ்வளவு—தேவைப்படுவது இவ்வளவு என்று "லாலி" பாடுகிறார், புதிய நிதியமைச்சர் நேரு!!

நாட்டில் வாழும் மக்கள் — அவர்களுடைய தேவைகள்-அவைகளைப் பூர்த்திசெய்து கொடுக்கும் வழி—இவைகளை மனதில்கொண்டு வரவு செலவு கணக்கிடப்படும் காலம் வரவேண்டும். அப்போது, வெறும் காகித நோட்டு மட்டுமே, நாட்டின் செல்வம் என்கிற கருத்து இருக்காது. என்னென்ன உற்பத்தி ஆயிற்று மக்களுக்காக, போதுமா என்கிற எண்ணம் உதிக்கும்.

தேவைப்படும் பொருள்களையும், இருக்கின்ற மக்கள் தொகையையும் வைத்துக் கணக்கிடப்பட வேண்டியதே நல்லரசின் பொறுப்பாகும்! ஆனால், இப்போதுள்ள அரசு, வரும் வரியையும் அதைச் செலவிடும் வழியையும் பற்றியுமே கணக்கு ஒப்புவிக்கின்றன!! இதனாலேயே ஒவ்வோராண்டும், சர்க்கார் தனது நிர்வாகத்துக்கெனச் செய்யும் செலவு பெரிதாயிருக்கிறது; மாநில அரசு கவர்னர் போன்றவர்களுக்கு எட்டு லட்சம் கொட்டி அழுவோம் என்றால், டில்லிபீடம் ஆண்டொன்றுக்கு 300 கோடி இராணுவத்துக்கு அழுவோம் என்கிறது. உற்

பத்திச் சாதனங்களுக்குப் பயன்படாமல், வெறும் நிர்வாகத்துக்கென ஆகும் செலவு, வர வரக் குறைகிறதா என்று பார்த்தால், இல்லை; அதிகமே ஆகிறது. உதாரணமாக 1951ல் குடியரசு தின விழாவுக்கு 18 ஆயிரம் செலவு செய்த டில்லி 1957ல் 6 இலட்சம் ரூபாய் அழித்திருக்கிறது. போன ஆண்டைவிட, இந்த ஆண்டு இராணுவத்துக்கென 12 கோடி, அதிகம் செலவிட முடிவு செய்துள்ளது.

வாங்குகிற வரிப்பணத்தில் சரி பாதியை இராணுவத்துக்கும் நிர்வாகத்துக்கும் செலவிட்டுவிட்டு, மீதிப் பாதியைக் கொண்டே நாட்டின் வளத்தைப் பெருக்கும் திட்டங்களுக்கு உதவவேண்டிய நிலையிலிருக்கிறது, டில்லி. மாநில அரசும், தனக்கென வருகிற வரியை வாங்க, தன் விகிதாசாரம் காரியங்களைக் கவனித்துக்கொண்டு, இருந்ததைச் சரிவர நடத்தினால் போதும் என்கிற கட்டத்துக்கு வர நேருகிறது. உற்பத்தி பெருக வேண்டுமானால், பெரிய ஆலைகள் வேண்டும்! அதற்கும் பணம் வேண்டும் —ஏது, டில்லியிடம்? சரிபாதி போய்விடுகிறதே, இராணுவத்துக்கு!! விவசாயத்தை வளர்க்க வேண்டும், வேலையற்றோருக்கு வேலை கொடுக்க வேண்டும், நிறையப் பள்ளிக்கூடங்களை வைக்கவேண்டும்—என்று ஆசைப்படுகிறது மாகாண அரசு. வசதி? இதுதான், கலால், சுங்கம், வருமானவரி, போன்ற வரியினங்களையெல்லாம் டில்லிக்கு அனுப்பிவிட்டு, "என்ன தருகிறாய்?" என்று ஏங்கிப் பெறவேண்டிய நிலையிலிருக்கிறதே. மாநிலங்களிலிருந்து மட்டும், டில்லிக்கு, கலால்—சுங்கம்—வருமான வரி மூலம் 800-கோடி ரூபாய்க்குமேல், ஒவ்வோராண்டும் வருகிறது. இதில், கால் பங்குதான், மாநிலங்களுக்குப் பிச்சை தரப்படுகிறது. இதையும், நிலவரி—விற்பனைவரி இவைகளையும் சேர்த்து வைத்துக்கொண்டு, கல்வி இலாகா, மராமத்து இலாகா, போலீஸ் இலாகா, விவசாய இலாகா, பொது இலாகா என்று பிரித்து அவைகளையெல்லாம் நிர்வகிக்கும் நிலைமையில் உள்ளன, மாகாணங்கள். இதனால் வண்டிஓடினால்போதும் என்கிற ஒரு எண்ணம் உருவாகிறதே ஒழிய; புதுமைகள் செய்யும் ஆசையோ, திட்டமோ உருவாக வழியில்லை. அப்படி உருவானாலும் அதற்குப் புதுவரி போடவேண்டும்! வளமாயிருந்தால் மக்களிடம் வரி போட்டு வசூலிக்க முடியும்—காய்ந்த வயலும், சுருங்கிய வயிறும்தானே, இங்கு உள்ளன! எப்படி வரிபோட முடியும்?

இப்படி, சுற்றிச் சுற்றி வரும் சக்கரம்போல, வருவதைக் கொண்டு நிர்வகித்து நல்ல பெயர் வாங்கினால் போதும் என்கிற நிலைமையிலேயே மாநில அரசுகள் உள்ளன — மத்ய பீடமோ, இராணுவம்—பாதுகாப்பு, கித்தாப்பு இவைகள் குறையாமலிருக்க வேண்டுமே என்கிற அளவோடு இருக்கிறது.

இரண்டு அரசுகள்! இரண்டு தினுசான அதிகாரிகள்! இங்கே பாதுகாப்புக்குப் போலீசென்றால், அங்கே இராணுவம்!—இப்படி இரண்டு சர்க்கார்களுக்கும் அழியும் பணம் ஏராளம்.

இது இல்லாமல் ஒரே அரசாக இருந்தால், எவ்வளவு செலவு குறையும்? அதுமட்டுமின்றி, இங்கே வசூலிக்கப்படும், மத்ய வரிகளையும், சுப்ரமணியமே வைத்துக்கொள்ளலாமே! அதுமட்டுமின்றி, நமது அரசின் கீழ் வாழும் மக்களின் தேவைகளையும், வசதிகளையும் ஒழுங்காகக் கவனிக்கும்போது, ஆலை, விவசாயம் போன்ற உற்பத்தித் துறைகள் எவ்வளவு ஏற்றம்பெறும்! எவ்வளவு பொருளாதார வளம் கிடைக்கும்? ஒரு பெரிய உபகண்டமாயிருப்பதால் டில்லியால் பொருளாதாரம் சம்பந்தமாகப் புரட்சிகரமான கொள்கைகள் எதையும் செய்ய இயலாது. யோசித்து யோசித்து, கடைசியில் வண்டி ஓடினால் போதும் என்கிற கட்டத்துக்கு வந்துவிடுகிறார்கள். வருகிற வரியையும், அதை எப்படி வகை செய்வது என்பது குறித்துமே, கணக்குப்போட முடிகிறது. 'பட்ஜட்' பழைய சுவடிபோலவே காட்சி அளிக்கிறது!

அதேபோல, வரிகளை டில்லிக்கு அளந்துவிட்டு, இருப்பதைக்கொண்டு தாளம் போட வேண்டிய நெருக்கடியிலிருப்பதாலேயே மாகாணங்களாலும் எந்தப் புதுமைகளையும் செய்ய முடிவதில்லை — "ஏதோ, நடந்தால் சரி" என்கிற கட்டத்துக்கு வருகிறார்கள்!

இந்தச் சங்கடம் ஒழிந்து, நல்லதொரு பொருளாதார சமுகம் அமைக்கப்பட வேண்டுமேயானால், அதற்குள்ள ஒரேவழி, இரண்டு சர்க்காருக்கு அடிமையாயிருக்கும் நிலை மாறுவது தான்.

இதையேதான், ஒவ்வோராண்டு வரவு செலவுத் திட்டமும், நமக்கு உணர்த்துகிறது.

★

நாடகம்

உண்மைக் கவிஞன்

அகஸ்டஸ்:—சீசருக்குப் பிறகு ரோம் சாம்ராஜ்யத்தைக் கட்டியாண்ட பேரரசன். உலக வரலாற்றில் அணையா ஒளிவிளக்குகளெனத் திகழ்வோருள் ஒருவன்.

மைக்கேன்னஸ்:— அகஸ்டஸின் அமைச்சர்களுள் ஒருவன். ஹொரேஸ் போன்ற கவிவாணர்களை ஆதரித்து வந்த பெருஞ் செல்வன்.

ஹொரேஸ்:—"ஓட்ஸ்" என்னும் கவிதை நூல் இயற்றிய கவிஞன். எளிமையினைப் பெரிதும் நாடியவன், "ஏனியட்" என்னும் காவியம் தீட்டி உலகப் புகழ்பெற்ற வர்ஜில் என்பவரால் அமைச்சர் மைக்கேன்னஸுக்கு அறிமுகப் படுத்தப்பட்டவன். அதன் பின் மைக்கேன்னஸின் ஆதரவிலேயே வாழ்நாளைக் கழித்தவன்.

1

[மாமன்னன் அகஸ்டஸின் அரண்மனை. அகஸ்டஸ் வேந்தனது தனியறை. மன்னன் சிந்தனை தோய்ந்த முகத்துடன் வீற்றிருக்கையில், அமைச்சர் மைக்கேன்னஸ் உள்ளே நுழைகிறான்.]

மைக்கோன்னஸ்:- (வந்து கொண்டே) வணக்கம், வேந்தே அழைத்தீர்களாமே?

அகஸ்டஸ்.- ஆமாம் மைக்கேன்னஸ், உடனடியாக உன்னிடம் கூறவேண்டியது, ஒன்றிருக்கிறது.

மைக்:- என்ன அது?

அகஸ்:- அரசாங்க அலுவல்கள் அடுக்கடுக்காகப் பெருகிவிட்டன, மைக்கேன்னஸ்; எல்லாவற்றையும் நினைவில் வைத்துக் கொண்டிருக்க என்னால் இயலவில்லை. சில சமயங்களில் பெருங் குழப்பமேகூட உண்டாகிவிடுகிறது. இதனைத் தவிர்க்க அந்தரங்கச் செயலாளன் ஒருவனை அமர்த்திக்கொள்வதென்று முடிவெடுத்துள்ளேன்; என்ன கருதுகின்றாய் நீ, என் முடிவு பற்றி?

மலர்மன்னன்

மைக்:- நல்ல முடிவுதான், ஆனால் தங்களுக்குச் செயலாளனாக இருப்பவன் எல்லாவிதத்திலும் தங்களுக்குப் பொருத்தமானவனாக இருக்க வேண்டுமே...!

அகஸ்:- ஆமாம், மைக்கோன்னஸ்; அரசியல் அனுபவம் மிக்கவனாக இருக்க வேண்டும்; சதிகாரனாக இருக்கக்கூடாது; அரசாங்க அலுவல்களைச் சுறுசுறுப்புடன் மேற்கொள்ள வேண்டும். ஆனால் இயந்திரமாக இருந்துவிடலாகாது. ஆழ்ந்த அறிவு மட்டுமன்றி, கவித்துவ நெஞ்சமும் படைத்தவனாயிருக்க வேண்டும். அத்தகையவனால்தான் எனக்கேற்ற அந்தரங்கச் செயலாளனாக இருக்க முடியும்.

[மைக்கேன்னஸ் சற்று நேரம் சிந்திக்கிறான், பின்னர் முகம் மலர வேந்தனை நோக்குகிறான்.]

அகஸ்:- என்ன மைக்கேன்னஸ், எனக்கேற்ற செயலாளனைக் கண்டு பிடித்துவிட்டாயா, அதற்குள்?

மைக்:- ஆமாம் மன்னவா, கண்டு பிடித்துவிட்டேன், என் ஆதரவில் வாழ்ந்துவரும் கவிஞன் ஹொரேஸ், தங்களுக்கு முற்றிலும் பொருத்தமானவன், இனிமையான கவிதைகள் பாடி மனதை மகிழ்விக்கும் திறம் படைத்தவன்; அரசியல் துறையிலும் நல்ல அனுபவம் பெற்றவன்......

அகஸ்:- (வியப்புடன்) பாடல் இயற்றும் புலவன் அரசியலனுபவம் பெற்றது எப்படி, மைக்கேன்னஸ்?

மைக்:-(தயக்கத்துடன்)விவரத்தை விளக்கமாகக் கூறினால் ஒருவேளை தாங்கள் அவனைச் செயலாளனாக்கிக்கொள்ள மறுத்து விடக்கூடும்.....

அகஸ்:- மாட்டேன், மைக்கேன்னஸ், நீ என் நலனில் நாட்டங் கொண்டவன்; உன்னால் தேர்ந்தெடுக்கப்படுபவன் நிச்சயமாக எனது நம்பிக்கைக்குரியவனாகத்தான் இருப்பான்; யார் அந்தக் கவிவாணன்?

மைக்:- பேரரசர் சீசர் படுகொலை செய்யப்பட்ட பிறகு, நாட்டை விட்டோடி ஆசியாமைனரில் குடியரசு நிறுவிய புரூட்டஸுக்கு நண்பனாக இருந்தவன் தான், இந்த ஹொரேஸ். தங்களை எதிர்த்திட புரூட்டஸ் திரட்டி வந்த படையின் ஒரு பிரிவுக்குத் தலைவனாகப் பணியாற்றியவன்; ஆனால் புரூட்டஸின் வீழ்ச்சிக்குப் பிறகு ரோம் ஆட்சிப் பீடத்தால் மன்னிக்கப்பட்டு, தாயகத்தில் வாழ அனுமதிக்கப்பட்டவன். தற்போது

டபர் ஆற்றிற்கருகாமையில் என்னால் அன்பளிப்பாகத் தரப்பட்ட பண்ணையொன்றில் எளிய இல்லம் அமைத்துக்கொண்டு அமைதியாக வாழ்நாளைக் கழித்துக் கொண்டிருக்கிறான்; அவனைச் செயலாளனாக்கிக் கொள்வதால் எவ்விதக் கெடுதலும் நேராது; மன்னவா, அவன்மீது சிறிதளவும் நாம் ஐயங்கொள்ளத் தேவையில்லை.

அகஸ்:- (புன்னகை புரிந்தவாறு) நீ உறுதி கூறிவிட்ட பிறகு எனக்கென்ன கவலை, மைக்கேனஸ்? நாளையே அவன் இங்கு வருவதற்கான ஏற்பாடு செய்துவிடு!

மைக்:- நானே நேரில் சென்று அவனை அழைத்து வருகிறேன், வேந்தே!

[மைக்கேனஸ் அகஸ்டஸிடம் விடைபெற்றுக் கொண்டு, தன் இருப்பிடம் திரும்புகிறான்.]

2

[இயற்கை எழில் சூழ்ந்த நில வெளி; பறவைகள் எழுப்பும் ஒலிகளைத் தவிர, வேறு ஓசை ஏதும் இல்லை; பசுமை நிறம் படர்ந்த அந்த நிலப் பரப்பின் நடுவில் எளிமைக் கோலத்தோடு விளங்கும் ஒரு சிறுவீடு. வீட்டின் முன் பக்கத்தில் அமர்ந்தபடி, அமைச்சர் மைக்கேனஸ் அருகில் வந்து நிற்பதையும் உணராமல் ஏதோ எழுதிக் கொண்டிருக்கிறான், கவிஞன் ஹொரேஸ்.]

மைக்கேனஸ்:- (வெகுநேரமாகியும், ஹொரேஸ் தன்னைக் கவனிக்காமலேயே இருப்பதால் மெல்லத் தொண்டையைக் கனைத்தபடி) ஹொரேஸ், கவிதை எழுதுகையில் நீ உன்னையே மறந்துவிடுகிறாய் போலும்!

ஹொரேஸ்:-(திடுக்கிட்டுத் திரும்பி) யார், அமைச்சர் மைக்கேனஸா? எப்போது வந்தீர்கள்? தாங்கள் வந்ததை நான் சிறிதளவும் உணரவில்லையே! வெகு நேரமாகவா காத்துநிற்கிறீர்கள்?

மைக்:- அதிக நேரமாகவில்லை, ஹொரேஸ்; நான் எதற்காக வந்தேனோ அந்த அலுவலை முடித்துக்கொண்டு வீடுதிரும்புவதற்கான நாழிகைதான் ஆயிற்று! கவிஞனின் ஏகாந்தத்தைக் குலைப்பது, அழகான கவிதையொன்றைக் கருவிலேயே சிதைப்பதாகும் என்பதை நன்கறிந்தவன்தான் நான், இருந்தாலும்......

ஹொரேஸ்:- (வெட்கத்துடன்) தங்களை வெகுநேரம் காத்து நிற்க வைத்துவிட்டேன்; கவிதை எழுதத் துவங்கினால் நீங்கள் கூறியதுபோல் நான் உலகையேதான் மறந்துவிடுகிறேன்; முதலில் அமருங்கள்; அருந்துவதற்கு ஏதேனும் கொண்டுவருகிறேன்......

மைக்:- அதற்கெல்லாம் நேரமில்லை, ஹொரேஸ். நான் உடனடியாகத் திரும்பவேண்டும்; முக்கியமான செய்தியொன்று சொல்லவே வந்தேன். எவருக்கும் கிட்டாத உன்னத இருக்கை உனக்குக் கிட்ட இருக்கிறது, ஹொரேஸ்; நாளை மறந்துவிடாமல் அரண்மனைக்கு வந்துவிடு. கவிதை எழுதுவதை நாளைக் காலையில் மட்டும் நிறுத்திக்கொள்!

ஹொரேஸ்:- (வியப்புடன்) என்ன புதிர் போடுகிறீர்கள்?

மைக்:- புதிரல்ல புலவனே! இப்போதே கூறிவிட்டால் பின்னர் சுவைக்காது! நாளைக்கு நீயே தெரிந்துகொள்வாய்! தவறாமல் அரண்மனைக்குவந்துசேர்; இது என் வேண்டுகோள் மட்டுமல்ல, ஹொரேஸ்; அரசர் அகஸ்டஸின் கட்டளையுங்கூட!

[ஹொரேஸ் ஏதும் புரியாமல்

வள்ளுவர் கண்ட காதல்

—[இராணி]—

நிகரில்லாத் தொழிலாம் நெசவுத் தொழில் செய்து வந்த வள்ளுவர், தான் நெய்த ஆடையை விற்பனை செய்யும் வியாபார நன்நோக்கோடு வீதி வழியாகச் செல்கின்றார்—விற்ற பின்னர்—வீடு திரும்புகின்றார்.

மாலை வேளையிலே மன எழுச்சிக்காக மகிழ்வூட்டும் ஊர் மத்தியிலுள்ள மணம் தரும் மலர் வனத்திற்குச் சென்றார். அங்கே, தலைவி ஒருத்தி தன் தோழியுடன் உரையாடுகிறாள். தன் கணவர் பண்டைத் தமிழரின் விருந்தோம்பும் பண்புக்கேற்பப் பணம் திரட்டும் வியாபார நிமித்தம் வெளியூர் செல்கின்றார் — விரைவிலே திரும்பிவிடுவதாகக்கூறி. அவர்கூறிச் சென்ற நாள் கழிந்தும் அவர் வரவில்லையாதலால் தன் தோழியிடம் "தோழி!என்னைப்பற்றி அவர் எண்ணவில்லைப்போலும், எண்ணியிருந்தால் சதா அவரையே எண்ணி, எண்ணி ஏங்கும் என் வதனத்தைக் காண வந்திருப்பார், ஏனோ? இன்னும் வரவில்லை. அவர் வந்தால் நான் அவரை மலர்முகங் காட்டி வரவேற்று—இன்முகத்துடன் அளவளாவமாட்டே"னென்று உறுதிகூறுகிறாள், இதைக் கேட்டுவிட்டு வீடு திரும்புகின்றார் தமிழ் மறை தந்த மாமேதை வள்ளுவர்.

பின்பொருநாள் அதே பூங்காவிற்குள் சென்றார். முன்பு தான் கண்ட அதே தலைவியையும் தோழியையும் காணுகின்றார். இப்போதும் அவர்களின் இனிய உரையாடலை நோக்குகின்றார். தோழி கூறுகின்றாள், அம்மணி! அன்றொருநாள் இப்பூங்காவிலே தாங்கள் தந்த 'உறுதி மொழி' 'உதிர்மொழியாகிவிட்டதே' என்று, தலைவி கூறுகிறாள்,

தோழி!நான் கூறியதுபோலத்தான் நடப்பேன்என்று எண்ணியிருந்தேன். ஆனால் வெளியூர் சென்ற எனது 'அவர்' நம்மகம் வந்து நடையேறியதும் என் கைகள் தண்ணீர் கொணரவும்—எனது கால்கள் என்னையறியாமலே அவர் பக்கம் சென்று, அவர் காலலம்பியதும் உள்ளே அழைத்துவரச் சென்றுள்ளது. நீ, கூறியதுபோல, எனது 'உறுதி மொழி' — 'உதிர் மொழி'யாகத்தான் உதிர்ந்துவிட்டது —அவரது களங்கமிலா அன்பு முகத்தைக் கண்டதும்".

இத்தகைய உரையாடல் நிகழ்த்திய —தலைவியினுடைய காதலின் சிறப்பைக் கூறவந்த வள்ளுவர் தனது அறிவாற்றல் மிகுதியால், குறள் வடிவிலே,

"புலப்பேன் கொல் புல்லுவேன்
கொல்லோ கலப்பேன்கொல்
கண்ணன்ன கேளிர் வரின்"

என்றும்,

"காணுங்கால் காணேன் தவறாய
காணாக்கால்
காணேன் தவறல் லவை"

என்னும் இரு குறள்களின் வழியாக அப்படியே நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றார். இதிலிருந்து அக்காலத் தமிழ்க் காதலின் பண்பு மிக்க நிலையை ஒருவாறு நல்ல முறையிலே உணர முடிகிறதல்லவா? ★

விழித்தபடி நிற்கும்போதே, அமைச்சர் மைக்கேன்னஸ் சென்று மறைகிறான்.]

3

[அகஸ்டஸ் அரண்மனையில் அகஸ்டஸின் தனியறை. அரசர்க்கரசன் அகஸ்டஸ், அமைச்சர் மைக்கேன்னஸ், கவிவாணன் ஹொரேஸ் ஆகிய மூவரும் அருகருகில் நின்று உரையாடியவண்ணமிருக்கின்றனர்.]

மைக்:- பெறுதற்கரிய பேறு — கிடைத்தற்கரிய வாய்ப்பு — உனக்குக் கிடைத்திருக்கிறது ஹொரேஸ்...

ஹொரேஸ்:- (மெல்லச் சிரித்து) விவரம் முழுவதையும் விளக்கமாகக் கூறினாலல்லவோ என்னால் புரிந்துகொள்ள முடியும்?

மைக்:- அரசர்பிரான் தன் அந்தரங்கச் செயலாளன் பதவிக்கு உன்னைத் தேர்ந்தெடுத்திருக்கிறார், ஹொரேஸ்!

ஹொரேஸ்:- (திடுக்கிட்டு) என்னையா? இந்தச் சாமானியனைக் கவிஞனையா தேர்ந்தெடுத்திருக்கிறார்?

அகஸ்டஸ்:- ஆமாம் ஹொரேஸ்; உள்ளம் சோர்வுறும் தருணத்தில் இனிய கவிதைகள் பாடி மகிழ்ச்சியூட்டும் வல்லமை படைத்தவன் நீ, எனக் கேள்வியுற்றேன்; அத்துடன் அரசியலிலும் உனக்கு அனுபவமிருப்பதாக அறிந்தேன். உன்னைத் தவிர என் அந்தரங்கச் செயலாளர் பதவிக்குத் தகுதியானவர்கள் வேறு யாருமில்லை, ஹொரேஸ்.

ஹொரேஸ்:- (தலை தாழ்த்தி) என்னை மன்னியுங்கள்...

மைக்:- ஏன்? எதற்காக ஹொரேஸ்?

ஹொரேஸ்:- அகஸ்டஸ் மன்னருக்கு எதிராகப் போர்க்கோலம் பூண்ட புரூட்டஸ் கூட்டத்தைச் சார்ந்தவனாக இருந்தவன்நான்; தற்சமயம் மனம் மாறிவிட்டவன்தான் என்றாலும், அரசரது அந்தரங்கச் செயலாளனாகப் பதவி ஏற்றுக்கொண்ட பிறகு அசம்பாவிதமாக ஏதேனும் ஒருவேளை நேர்ந்துவிடில், அரசரவையினரும், மக்களும் என்னை ஐயக் கண்களோடு நோக்கக்கூடும். பொறாமைக்காரர்கள் என்மீது வீண் பழிகளைச் சுமத்தக்கூடும். அதற்கெல்லாம் சந்தர்ப்பமளிக்க நான் விரும்பவில்லை, அமைச்சரே......

மைக்:- வீணான சந்தேகம் இது, ஹொரேஸ். உன்னை நன்கறிந்தவர்கள் நாங்கள்; எனவே ஒருக்காலும் நீ அந்த நிலைக்கு ஆளாக்கப்படமாட்டாய்; ஹொரேஸ், என் வாக்கை நீ நம்பு.

ஹொரேஸ்:. இந்த அனுதைக் கவிஞனிடம்—அதுவும் பகைவனுடன் சில காலம் வாழ்ந்தவனிடம் — தாங்கள் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள்! அமைச்சரே, வாக்குறுதியளித்தும் கூடப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள இயலாதவனாக இருக்கிறேன் நான்; என்னை மன்னித்து விடுங்கள்......

அகஸ்:- ஏன் அப்படிக் கூறுகிறாய் ஹொரேஸ்? அமைச்சரது வாக்குறுதியிலுமா உனக்கு நம்பிக்கை இல்லை?

ஹொரேஸ்:- தவறாகக் கருதிவிட்டீர்கள் வேந்தே; நான் மறுப்பதற்குக் காரணம் அதுவல்ல; மன்னர் மன்னவா, நான் கவிஞன்; கவித்துவ நெஞ்சம் படைத்தவன்; பந்தங்கள் ஏதுமற்ற விடுதலைப் பறவையாக இருக்கவே நான் விழைகிறேன். அரண்மனையின் ஆடம்பர வாழ்வில் திளைக்கவோ, அரசியலில் அமிழ்ந்து போகவோ நான் விரும்பவில்லை. மனம்போனபடியெல்லாம் சுற்றித் திரிவதையே நான் பெரிதும் வேண்டுகின்றேன். காணும் காட்சிகளைப் பற்றியெல்லாம் கவிதைகள் பாட விழைகிறேன். இயற்கையின் அற்புதங்களை வர்ணிக்க ஆசைப்படுகிறேன். அலைகள் அடுக்கடுக்காக வந்துமோதும் கடற்கரையில் நின்றபடி ஆதவன் தோன்றுவதையும் நிலவின் எழுச்சியையும் கண்டு களிக்க விரும்புகின்றேன்; ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருக்கும் நீண்ட மலைத்தொடர்களைப் பார்த்துப் பார்த்து இரசிக்க விழைகிறேன். வெட்டவெளியில் நின்றபடி என்னைச் சூழ்ந்திருக்கும் இயற்கையிடம் பாடங்கற்க நினைக்கிறேன். அமைதியான சூழ்நிலையில், இயற்கையின் அரவணைப்பில் அறிஞர் பெருமக்கள் தந்து சென்ற நூற்களை ஆழ்ந்து படிப்பதைக் காட்டிலும் சிறப்பானது வேறொன்றுமில்லையென்று கருதுகின்றேன், வேந்தே, ஆடம்பரம், தேவையற்ற ஆர்ப்பாட்டம், அளவுக்கு மீறிய அலங்காரம் இவற்றோடு போலி வாழ்க்கை நடத்தும் நகரத்தவர் நடுவில், சூதும் வாதும் நிறைந்த அரசியல் துறையில் ஈடுபடுவதைக் காட்டிலும் வேதனை தரத்தக்கது வேறொன்றுமில்லை என்று எண்ணுபவன் நான். எனவே, அரசர் பெருமானுக்கு—அகில உலகும் வியந்து போற்றும் அகஸ்டஸ் மன்னருக்கு—அந்தரங்கச் செயலாளனாகும் வாய்ப்புக் கிடைத்தற்கரியது என்பதை நன்குணர்ந்திருப்பினும், அதனை ஏற்க மறுக்கிறேன். அப்பதவியை நான் ஏற்பதால் நான் இயந்திரமாகிவிடக்கூடும்; எனது கவித்துவ நெஞ்சம் மயானமாகிவிடக்கூடும். வேந்தே, இயற்கையின் எழிலைக் கண்டு மகிழவேண்டிய நேரத்தில் அரசாங்க அலுவல்களில் ஈடுபட நான் சம்மதிக்கமாட்டேன்; என்னை மன்னித்து விடுங்கள்!.

அகஸ்:- உள்ளத்து உணர்ச்சி அத்தனையையும் பொழிந்து தள்ளிவிட்டாய், ஹொரேஸ்! நீ உண்மையான கவிஞன். உண்மைக் கவிஞன் என்றும் தன் கரங்களுக்கும் உள்ளத்துக்கும் விலங்கு பூட்டிக்கொள்ளமாட்டான்; அது பொன்விலங்காக இருப்பினும் வெறுப்புடன் விலக்கியே தள்ளுவான்- உண்மையான கவித்துவ நெஞ்சம் அலைந்து திரிவதையே என்றும் நாடி நிற்கும்; ஹொரேஸ், உன்னை நான் நன்கு உணர்ந்துகொண்டேன். எனக்குச் செயலாளனாக இருக்கும் பதவி கிடைத்தற்கரியது என்று தெரிந்திருந்தும், அதனை வெறுத்தொதுக்கிய உன் மன இயல்பை வியந்து போற்றுகின்றேன். "அரசரின் அந்தரங்கச் செயலாளன்" என்ற முறையில் உனது அந்தஸ்து உயரும்; நாட்டில் உனக்குத் தனி மரியாதை தரப்படும்; இதையெல்லாம் அறிந்திருந்தும்கூட நீ அதனை ஏற்க முன்வரவில்லை; உண்மைக் கவிஞனுக்குத்தான் இத்தகைய மன நிலை இருக்கு

மென்பதைத் தெரிந்துகொண்டேன்; போய்வா, ஹொரேஸ் பந்தங்கள் ஏதுமின்றிச் சுதந்திரப் பறவையாகச் சுற்றி அலை; இயற்கையின் எழிலை அள்ளி அள்ளிப் பருகு; உன்னதமான கவிதைகளை உலகுக்கு வழங்கு!

ஹொரேஸ்:- நன்றி வேந்தே, நீடு வாழ்க, உங்கள் உயரிய உள்ளப் போக்கு! அமைச்சரே, என் செய்கை தங்களுக்குத் தவருகத் தோன்றினால் தயவு செய்து மன்னித்துவிடுங்கள். அரசர் என்னை நன்கு உணர்ந்து கொண்டார்; என்னை விடுதலைப் பறவையாக வாழ அனுமதியும் அளித்துவிட்டார்; நீங்கள் எனக்கு விடை கொடுங்கள்; டைபர் ஆற்றின் இன்னிசையைக் கேட்பதற்காக நான் உடனே சென்றாக வேண்டும்; நீலவண்ணமாய்ப் பரந்துகிடக்கும் வானில் அணிவகுத்துச் செல்லும் முகிற் கூட்டங்களை நான் கண்டு மகிழ்ந்தாக வேண்டும்; அரசர்க்கரசே, அமைச்சர் பெருமானே, என் நலனில் நாட்டங்கொண்ட உங்களிருவருக்கும் என் நன்றி கலந்த வணக்கங்கள்...போய் வருகிறேன்......

[கவிஞன் ஹொரேஸ் பித்துப் பிடித்தவன்போல்வேகமாக வெளியேறுகின்ருன்; மன்னர் மன்னன் அகஸ்டஸின் உதடுகள் மெல்ல நெகிழ்ந்து 'உண்மையான கவிஞன்' என்று முணுமுணுக்கின்றன.

★

—○—

சிறைச்சாலை

[ஆங்கிலப் பெருங்கவி பைரன் எழுதிய The Prisoner of Chillon (சிறைக்கைதி) என்ற பாடலை தமிழில் கட்டுரை வடிவில் இங்கு தரப்படுகிறது.]

*

"எங்கள் எழுவரைச் சிறையில் அடைத்தீர்கள். எல்லையில்லாக் கொடுமைகள் செய்தீர்கள். எக்காளமிடும் ஏகாதிபத்திய வெறியுணர்ச்சியால் இழிவாக நடத்தினீர்கள். இருளுக்கும், மருளுக்கும் இடமான குறுகிய கொட்டடியில் அடைத்தீர்கள். கொண்டுள்ள கொள்கையினைக் கொன்றழிக்க இயலுமோ? துருப்பிடித்த பெருங் கம்பி சிறையாமோ? கரங்களைக் கவ்வி நிற்கும் கொடுங்காப்பு விலங்காமோ? வெட்கம்! வெட்கம்!! வெட்டி எம்மைச் சிதைத்தாலும், வெந்தீயில் இட்டாலும் நாட்டுரிமை வேட்கையினைக் கடுகளவும் விடமாட்டோம். வெட்டுங்கள் எம்மை! வீழ்த்துங்கள் எம்மை!! அத்தனையும் நாங்கள் வித்திட்ட விடுதலைக்கு உரம் வைத்து நீர் பாய்ச்சல் போலாம்."

"காற்றுக்கு வழியுண்டா? காரிருளை மாற்றிடவே மார்க்கமுண்டா? கதிரவனின் பொன்னொளியைக் கண்டதுண்டா? ஐயகோ! கொடுமை!! கொடுமை!!! கொட்டடியில் செய்திட்ட கொடுமையினை இன்னும் சொல்வேன். கேண்மின்! கேண்மின்!"

"கடுங்குளிரைத் தாங்கிடவே வகையில்லை. கொடும் பசிக்கு ஆளானோம். கால் வயிறு கஞ்சிக்கு வகை ஏது? ஆயின் என்ன! எதையும் தாங்கும் இதயம் உண்டு. வருவதெல்லாம் வரட்டும். அவையெல்லாம் விடுதலைக்கு வழி கோலும்."

"சிறைச்சாலை கொள்ளையரின் உள்ளத்தை மாற்றிடலாம். சமுகத்தில் கொட்டுகின்ற தேளாம் கொடியோரை மாற்றிடலாம், பொல்லாங்கு செய்வோரை, பாதகரை, பயங்காட்டி மாற்றிடலாம், சுதந்திரத்தை உயிராகக்கொண்டவரைச் சுட்டெரித்தாலும் மாறுவரோ? எம்மை வெட்டிப் பிளந்தாலும், வேல் பாய்ச்சிக் கொன்ருலும், அணு, அணுவாய்ச் சிதைத்து அலைகடலில் எறிந்தாலும் துஞ்சுதலல்லால் அஞ்சுதல் செய்யோம்."

"நாங்கள் செய்துவிட்ட கொடுமைதான் என்ன? எம்மைச் சூழ்ந்தாரும், சுற்றத்தாரும் வாழச் சூழ்ச்சி செய்தோமா? மாற்ருர் பொருளைச் சூறையாடினோமா? 'பொது நலத்தின்' பெயரைச் சொல்லிப் போக்கற்றவரைச் சுரண்ட நினைத்தோமா? என்ன செய்தோம்? எங்களுக்கு ஏன் இத்தகு கொடுந் தண்டனை? சுதந்திர உணர்ச்சி, இவை எல்லாவற்றையும் விடக் கொடுமை நிறைந்தது என்று நினைக்கிறீர்களா? இருக்கலாம், இருக்கலாம். நீங்கள் அப்படி நினைத்தால் நாங்கள் ஆச்சரியப்பட மாட்டோம்?"

"தவறில்லாத வழி செல்கின்றோம். அதில் தவறென்ன கண்டீர், எம் கொள்கை புரட்சியின் புது உருவம். புதுமையின் மறுமலர்ச்சி. எம்மால் மறக்க இயலா ஒரே கொள்கை. விடுதலை உணர்ச்சியை எங்கள் உள்ளத்தில் பாய்ச்சி உயிரோடு கலக்கச் செய்த உயரிய இலட்சியம்."

"ஐயகோ! எப்படிச்சொல்வேன். நினைத்தாலும் நெஞ்சம் துடிக்கிறதே! விடுதலை வேட்கை அவரைச் சவக்குழியிற்சேர்த்தது. உடன்பிறந்த அறுவரும் அவர் வழி போய் சேர்ந்தனர். எஞ்சியது நான். இருந்துமென்ன! அஞ்சவில்லை. நஞ்சைக் கொடுத்தாலும் வெஞ்சிறையிலடைத்தாலும் எஞ்ஞான்றும் விடுதலைக் கொள்கையினை விடமாட்டேன். உண்மை இது! உறுதி இது!!!"

"காலம் மனிதனை எவ்வளவு மாற்றிவிடுகிறது. வரும்போது வாலிபனாகத்தானே இருந்தேன். இப்போது வயதுக்கு மிஞ்சிய உடல் தளர்ச்சி. கவலையால் குழி விழுந்த கண்கள். சோகத்தால் சுருங்கிவிட்ட அங்கங்கள். தாடி நரைத்த நிலை. நாடி தளர்ந்த உடல். இப்போது எனக்கு விடுதலையாம்! ஹாஹா......ஹா! வேடிக்கை! வேடிக்கை!! வேண்டவே! வேண்டாம்!! நான் இதை விட்டுப் போய்விட்டால் சிலந்திகள் விளையாட என்ன செய்யும்? அவைகள் சீற்றங்கொள்ளும்; பழகிவிட்ட பறவை இனங்கள் ஏமாந்துபோகும். வேண்டாம் எனக்கு விடுதலை வேண்டவே வேண்டாம்" கைதியின் குரல் சிறைச்சாலைச் சுவர்களில் எதிரொலித்து கானகம் முழுவதும் கேட்டது.

★

சிறுகதை

துணை

—[அன்பு]—

காலை படுக்கையிலிருந்து எழுந்ததும் நாளிதழில் வந்திருந்த ஒரு செய்தி என்னைப் பெரிதும் கவர்ந்தது. தினந்தோறும் அது போன்ற எத்தனையோ செய்திகள் வருகின்றன. ஆனால் அப்போது நான் பார்த்த செய்தி மட்டும் என் சிந்தனையை எங்கெங்கோ இழுத்துச்சென்றது. அந்தச்செய்தியின் சுருக்கம் இது: "காதலனது திடீர் மரணத்தைப் பொறுக்க முடியாத காதலியும் தற்கொலை செய்துகொண்டாள்." 'காதலன் இறந்தால் அவளும் ஏன் தற்கொலை செய்துகொண்டு இறக்க வேண்டும்? அத்துணையளவு துன்பத்தைத் தாங்காத நெஞ்சா? அல்லது அவர்களிடையே ஏற்பட்டிருந்த பிரிக்க முடியாத பிணைப்பின் பயனா இது?' என்று என்னென்னவோ எண்ணினேன்.

இப்படி என் எண்ணக் கயிறு இழுத்த திசையில் சென்றேன். வெகுநாட்களுக்கு முன் நடந்த பழைய சம்பவம் ஒன்று என் மனத் திரையில் பளிச்சிட்டது. அந்த ஒரு நிகழ்ச்சி மட்டுமே குறிப்பாக நினைவுக்கு வருவதற்கு காரணம் ஒன்றிருக்கிறது. காலையில் நாளிதழில் வந்திருந்த செய்திக்கும் அந்த நிகழ்ச்சிக்கும் ஒரு ஒற்றுமையிருப்பதாகவே நான் உணர்ந்தேன்.

வெகுநாட்களுக்கு முன்பெல்லாம் என் நண்பரொருவருடன் மாலை வேளையில் ஊரின் ஓரத்தே இருந்த தோப்புக்குச் சென்று உலவிவிட்டு வருவது வழக்கம். அப்படி ஒரு நாள் சென்றபோதுதான் அந்த நிகழ்ச்சி நடந்தது. சூரியன் மறைந்துகொண்டிருந்தது. உழவர்கள் தங்கள் அன்றுடவேலைகளை முடித்துக்கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள். புள்ளினங்கள் தங்கள் கூடுகளை நோக்கிப் பறந்துகொண்டிருந்தன. காலை மலர்ச்சிக்குப் பின் மாலை மறுமலர்ச்சி தோன்றியது.

மனிதர்களுக்குச் சிறுவயதில் ஏற்பட்டுவிடும் சில விருப்ப விளையாட்டுக்கள் கடைசிவரை நீடித்துவிடும். சிறு வயதில் குறி பார்த்துக் கல்லெறிந்து பறவைகளையோ விலங்கினங்களையோ, வீழ்த்துவதில் எனக்கு நிகரான தோழர்களே கிடையாது. இந்தத் திறமை எனக்கு நாளுக்கு நாள் வளர்ந்தது.

வயதுவந்த மனிதனாகிவிட்ட நான் இப்போதும் அப்பழக்கத்தை விட்டுவிடவில்லை. பள்ளி வயதில் குறி பார்த்துக் கல்லெறிந்து பறவைகளை வீழ்த்துவதில் திறமைசாலியாக இருந்த நான், வயதுவந்தும் துப்பாக்கிகொண்டு பறவைகளைச் சுடுவதில் வல்லமையுடையவனாகிவிட்டேன். இந்தத் திறமையை எனக்கு யாரும் கற்றுக்கொடுக்கவில்லை. நானே தெரிந்துகொண்டேன். நண்பரோடு சென்றிருந்த அன்றும் என் துப்பாக்கியை எடுத்துச் சென்றிருந்தேன்.

அடர்ந்த தோப்பைக் கடந்து விசாலமான வெட்டவெளிக்கு வந்தோம். சூரியன் முழுவதும் மறைந்துவிட்டது. ஆனாலும் ஒளி மங்கவில்லை. நிர்மலமான ஆகாய வெளியை அண்ணாந்து பார்த்துக்கொண்டே நடந்தோம். அப்போது இரு பறவைகள்—ஒரு இணை — தன்னந் தனியாகக் கூடு நோக்கித் திரும்பிக்கொண்டிருந்தன. இரண்டும் சேர்ந்தே காலையில் கூட்டைவிட்டுக்கிளம்பியிருக்கக்கூடும். பகல் முழுதும் எதேச்சையாக—மனிதனைப் போலல்லாமல்—தன் இனங்களோடுசேர்ந்து, கிடைத்த உணவைப் பொறுக்கி உண்டுவிட்டு மாலை கூடு நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தன. 'மனிதனைப்போல் போட்டி, பொறாமை, சண்டை சச்சரவற்றுக் கவலையே இல்லாமல் கூட்டுணர்ச்சியோடு வாழ்கின்றனவே பறவையினங்கள்! மனிதன் ஏன் இன்னும் அவைகளிடமிருந்து அந்தப் பாடங்களை மட்டும் கற்றுக் கொள்ளவில்லை? அல்லது தெரிந்திருந்தும் ஏன் இப்படி நடக்கிறான்?' என்று அந்த இணைப் பறவைகளைப்பார்த்துச் சிந்தித்துக் கொண்டிருந்தேனேயல்லாமல், அவைகளைச்சுடவேண்டும் என்று நான் அப்போது நினைக்கவில்லை.

என்னோடு வந்திருந்த நண்பர் நான் சுடும் திறமையை நேரிலேயே பார்க்க விழைந்தார் போலும்! "நீங்கள்தான் பறந்து சென்று கொண்டிருக்கும் பறவைகளைக் கூடச் சுடுவதில் திறமைசாலியாயிற்றே, எங்கே இதோ ஒரு பறவை தன் துணையுடன் பறந்து செல்கிறது. அதில் துணையை நீக்கி மற்றொன்றை மட்டும் சுடுங்கள் பார்க்கலாம்!" என்று ஆர்வம் ததும்ப வேண்டினார். நானும் ஒரு கணம் அந்த இணைப் பறவைகளைப் பார்த்தேன். நண்பர் உண்மையிலேயே எனக்குக் கடினமான தேர்வுதான் வைத்திருந்தார்! இரண்டும் ஒரே உருவில் சென்றாற்போன்று ஜோடியாகப் பறந்து சென்று கொண்டிருந்தன! இருந்தும் அதில் ஒன்றை மட்டும் சுடுவதில்தான் திறமையிருக்கிறது என்று நானே ஒருகணம் எண்ணினேன். துப்பாக்கியை, ஒருதரம் மருந்தெல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்த்துக்கொண்டு தோளில் வைத்துக் குறி பார்த்தேன். அப்போதும் அந்தஇணைப் பறவைகள் சரிசமமாகவே எங்களைக் கடந்து பறந்து சென்று

கொண்டிருந்தன. பார்த்துக்கொண்டு நின்ருல் காலம் கடந்துவிடும் என எண்ணி நன்ருக அவைகளில் ஒன்றின் மீது குறிவைத்துக் கொண்டு துப்பாக்கிக் குதிரையை அழுத்தி விட்டேன். துப்பாக்கியிலிருந்து குண்டு வெளிப்பட்டு விட்டதைச் சத்தம் உணர்த்தி நின்றது. அப்போதுதான் என் தவறு தெரிந்தது. நான் வைத்த குறி ஒன்றை மட்டும் வீழ்த்தாது இரண்டையுமே வீழ்த்திவிடும் என்பதுதான் அந்தத் தவறு. தவறு என் நெஞ்சைக் குடைந்தது. ஆனல் அதற்குள்......! சரி சமமாகப் பறந்து கொண்டிருந்த அந்த இணை சிறிது முன்பின்னுகப் பறக்க ஆரம்பித்தது! துப்பாக்கியிலிருந்து பீறிட்டுக்கொண்டு கிளம்பிய குண்டும் அவைகளிரண்டில் ஒன்றின் உடலை மட்டுமே பதம் பார்த்துவிட்டது! பறவை குருதி சொட்டச் சொட்ட எங்களருகே வந்து வீழ்ந்தது.

நண்பர், சரிசமமாகப் பறந்து கொண்டிருந்த பறவைகளில் ஒன்றை மட்டும் சுட்ட என் திறமைக்கு மகிழ்ச்சி தெரிவித்துப் பாராட்டினுர். பறவைகள் குண்டு பாயும் நேரத்தில் சிறிது முன் பின்னுகப் பறந்தது அவர் கண்ணுக்குப் புலப்படவில்லை.

பறந்து சென்று கொண்டிருந்த இணையில் ஒன்று இறந்து வீழ்ந்தவுடன் அதன் துணை......! ஆம்! அதைப் பற்றித்தானே இந்தச் சிந்தனையே எனக்கு எழுந்தது. துப்பாக்கிச் சத்தத்தைக் கேட்டதும், தன் துணையுடன் விரைவில் சென்று தப்பிவிடலாம் என எண்ணிய அந்தத்துணைப்பறவை விரைவில் பறக்க ஆரப்பித்தது. ஆனல் அவ்வாறு சிறிதுதூரம் பறந்து சென்ற பிறகுதான், தன் துணையும் அவ்வாறு பறக்க முடியாமல் வழியிலேயே துப்பாக்கிக்கு இரையாகிவிட்டதை உணர்ந்தது போலிருக்கிறது! என்ன நினைத்ததோ, வந்தவழியிலேயே திரும்பி வர ஆரம்பித்தது. நாங்கள் மறைவாக ஓர் இடம் நோக்கி நின்று கொண்டோம். திரும்பிவந்த அந்தத் துணைப் பறவை தாழ்வாக இறங்கிப் பறந்து இறந்த பறவையைச் சுற்றிச் சுற்றி வந்தது. சாதாரணமாக அல்லாமல் அடிக்குரலால் கதறிக்கொண்டே இருந்தது. அதற்கு மட்டும் அப்போது நாம் பேசும் மொழி தெரிந்திருந்தால் என்னென்னசொல்லிக் கதறியிருக்குமோ? கதறிக்கொண்டே மேலே பறப்பதும் பிறகு கீழே இறங்கிச் சுற்றிச்சுற்றிப் பறப்பதுமாக இருந்தது. அப்போதும் எனக்கு சிறிது இரக்க உணர்ச்சிகூட உண்டாகவில்லை. சிறிது நேரம் சென்ற பின் அப்பறவை முன்பு சென்ற வழியே மேலே பறந்து செல்ல ஆரம்பித்தது.

இதற்குள் எனக்கு அதையும் சுட்டுவிட்டால் என்ன என்ற எண்ணம் தோன்றியது. இந்த எண்ணத்தை நண்பரிடம் சொல்லியிருந்தால் தடுத்திருப்பாரோ என்னவோ; நான் அவரிடம் கூருமலேயே துப்பாக்கியைச் சரிபார்த்துக் கொண்டு மேல்நோக்கி சுட ஆரம்பித்தேன். ஆனல் அதற்குள் அந்தத்துணைப் பறவை என் குறியினின்றும் தப்பிச் சிறிதுதூரம் சென்றுவிட்டது. சரியான நேரத்தில் சுட முடியவில்லையே என்று என் மனம் துணுக்குற்றது.

அடுத்த இரண்டு நிமிடங்களுக்குள் நாங்கள் வீடுதிரும்ப ஆயத்தமானேம். நாங்கள் புறப்பட்டுக் கொண்டிருக்கும் போதுதான் தப்பிச் சென்ற அந்தப் பறவை திரும்பவும் வந்து, முன்போலவே, இறந்த பறவையைச் சுற்றிச் சுற்றிக்கத்த ஆரம்பித்தது. முன்பு குறிவைத்துத் தப்பிச்சென்றுவிட்டதால் உண்டான கோபத்தால் அம்முறை அதை எப்படியும் சுட்டுவிடுவது என்று தீர்மானித்துத் துப்பாக்கியை எடுத்து அது பறக்கும் இடமெல்லாம் சுழற்றிக் குறிவைத்துச்சுட ஆரம்பித்தேன். நான் அதைச் சுடப் போகிறேன் என்று நன்ருகத் தெரிந்தும் அந்தத்துணைப்பறவை தப்பிப்பறந்து சென்றுவிடாமல், வேகமாகச் சுற்றிப் பறந்துகொண்டிருந்த அது மிக மெதுவாக ஓரிடத்திலேயே நிலையாகப் பறக்க ஆரம்பித்தது! இதுதான் சமயமென்று துப்பாக்கியின் விசையை அழுத்திவிட்டேன்! குண்டு சரியாகச் சென்று அதன் உடலைத் துளைத்தது! இரத்தம் வழிய அந்தத் துணைப் பறவையும் முன்பு வீழ்ந்த அந்தப் பறவையினருகில் வந்து வீழ்ந்தது!

இருளாகிவிடவே, நண்பர் வீடு திரும்பலாம் என்ருர். பேசிக் கொண்டே ஊர் நோக்கி நடந்தோம். "பரவாயில்லையே இரண்டையும் சாமர்த்தியமாகச் சுட்டுவிட்டீர்களே!" என்ருர் நண்பர். சரியாக ஒளியில்லை; இருந்திருந்தால் இன்னும் சுலபமாகவே சுட்டிருக்கலாம்" என்று அவருக்காகச் சொன்னேனே தவிர, என் மனம் அப்போது என்னென்னவோ எண்ணிக்கொண்டு வந்தது. இறந்த அந்த இணை பறவைகளுக்காக நான் இரக்கம்

நூல் அரங்கு

இப்பொழுதெல்லாம் கிராமங்கள் தோறும், கழக நாடகங்களை நடிப்பதில், பெரியதோர் ஆவல் ஏற்பட்டிருக்கிறது. கழகத் தோழர்கள் இருக்கின்ற வசதிகளைக் கொண்டு, ஆங்காங்கும் கழக நாடகங்களை நடத்திவருகிருர்கள். இது, மிகவும் பயனுள்ளது என்பதோடு வளரவேண்டிய ஒன்றுமாகும். ஆனல், அந்தளவுக்குப் புதிய நாடகங்கள், முன்போல் எழுதப்படுவதில்லை. காரணம், எழுதவேண்டியவர்களுக்கு பலதரப்பட்ட பணியும், பொறுப்பும் அதிகமாகியிருப்பது தான். இருந்தும் கலைஞர் மு. கருணநிதி, "உதய சூரியன்" எனும்புதிய தொரு நாடகத்தை—கழகப் பிரச்சாரத்தையே நோக்கமாகக் கொண்டு எழுதியுள்ளார். அதனை நாடகமாக்கி, திருச்சி முத்துவேல் பதிப்பகத்தார் வெளியிட்டுள்ளனர். உதய சூரியனேடு கூட திருவாரூர் பி. சி. கணேசன், பி. எஸ்ஸி. எழுதிய "எழுத்தாளன் காதலி", எனும் நாடகத்தையும், முத்துவேல் பதிப்பகத்தார் வெளியிட்டுள்ளனர். கணேசன், ஆங்கிலத்தில் எழுதும் வன்மை பெற்றவர். தமிழிலும், அவரது எழுத்துக்கள், ஒளிபெற்று வருகின்றன, ஆங்கிலத்தில் 'லைட் கலர்' என்பார்களே அதுபோல, ஒரு கதையை எடுத்துக்கொண்டு அதில் முன்னேற்றக் கருத்துக்களை வைத்து, இந்நாடகத்தை ஆக்கியுள்ளார்—படிக்கவும், நடிக்கவும் பயன்படும் முறையில் விளங்கும் இந்த இரு நாடகங்களும் விலை மலிவுதான்.

உதயசூரியன் விலை ரூ. 1-50
எழுத்தாளன் காதலி விலை ரூ. 1-25

கொள்ளவில்லையே தவிர, அவைகளுள் ஒன்று இறந்ததால் மற்றொன்றும் தானாகவே வந்து என் துப்பாக்கிக் குண்டுக்கு இரையானதற்கு ஏதோ ஓர் காரணம் இருக்கவேண்டுமென என் நெஞ்சம் எண்ணிக்கொண்டே வந்தது. என் நண்பருக்குமட்டும், எனக்குப் புரியாத காரணம் அவர் மனதில் எழவேயில்லை என்றே எண்ணுகிறேன்.

வரும் வழியில் நண்பரோடு பேசிக்கொண்டிருந்துவிட்டு வந்ததால் வீடு திரும்ப இரவு நீண்ட நேரமாகிவிட்டது. என் துணைவி தூங்கியிருப்பாள் என்று எண்ணிக்கொண்டு வீட்டினுள் நுழைந்தேன்: ஆனால் அவளோ என் வரவுக்காக விளக்கை வைத்துக்கொண்டு காத்திருந்தாள்! "சாப்பிட்டாயா? ஏன் இன்னும் தூங்காமல் இருக்கிறாய்?" என்று வினவிக் கொண்டே உடைகளை மாற்றினேன். "இன்னும் சாப்பிடவில்லை, உங்களுக்காகத்தான் காத்திருந்தேன்" என்று கூறிக்கொண்டே எனக்கு உணவு பரிமாறிவிட்டுப்பின் அவளும்சாப்பிட ஆரம்பித்தாள்!

அப்போது விளக்கம் காணமுடியாதகாரணத்துக்கு அன்று காலை நாளிதழில் வந்த செய்தி எனக்கு விளக்கமளித்தது. அந்த இணைப் பறவைகளினூடே இருந்த பிணைப்பின் **சக்தி** எனக்கு அப்போது விளங்கவில்லை. அன்று இரவு உண்டு உறங்குவதற்காகப் படுத்த எனக்கு அந்த இணை பறவைகளின்நினைவு உறக்கத்தை கொடுக்காமல் சிந்தனையையே கொடுத்துக் கொண்டிருந்தது! ஒன்று இறந்ததால் மற்றொன்று வலிய வந்து தன்னை மாய்த்துக் கொண்டதற்கு ஏதோ ஓர் காரணம் இருக்கவேண்டும் என அப்போது நினைத்தேனே தவிர, அதற்குக் காரணம் துணையின் சக்தி என்பது எனக்கு விளங்கவில்லை.

உலகில் ஓர் இன உயிர் அதே இன மற்றொரு உயிரின் துணையை நாடி நிற்கிறது. அந்தத்துணையின் பிணைப்பே ஈருயிர் ஈருடலாக இருந்து அவைகளை ஓருயிர் ஈருடல் என்னும் உயர்ந்த பண்புக்கு உறைவிடமாக்கி விடுகிறது. அப்பண்பு வளர வளர அவ்வாறு சேர்ந்த உயிர்கள் இரண்டும் பிரிக்க முடியாதவைகளாகிவிடுகின்றன. அவ்வாறு இணைப்பில், ஒருயிர் பிரிந்தாலும், அப்பிரிவைத் தாங்கமுடியாதனவும் — துணை போய்த் தான்மட்டும் இவ்வுலகில் வாழமுடியாதனவும்—தன் துணையின் அழிவையே தானும் தேடிக்கொண்டு இறப்பில் அமைதி காண்கின்றது!

மற்றுமோர் முறை என் மனக் கண்ணுக்கு, நாளிதழ் செய்தியும், துணைப் பறவை இறந்த நிகழ்ச்சியும், என்வரவுக்காகக் கண் துயிலாமலும் சாப்பிடாமலும் காத்திருந்த என் துணைவியின் செயலும் மாறி மாறி வந்தன! உலகில் இரு உயிர்கள் ஒன்றாகிவிட்டபின்னர் அவைகளினூடே ஏற்பட்டுவிடுகின்ற பிணைப்பின் சக்தியை எண்ணி வியந்தேன்!

[மாபசான் சிறுகதையொன்றினை மையமாகக்கொண்டு இது எழுதப்பட்டது.]

★

அறிக்கை:-

"திராவிட நாடு"

——[✻]——

1.	வெளியாகும் இடம் ...	95, திருக்கச்சிநம்பி தெரு, காஞ்சிபுரம்.
2.	வெளியிடும் நாட்கள் ...	வாரம் ஒருமுறை (ஞாயிறு)
3.	அச்சிடுவோரின் பெயர் ...	சி. என். அண்ணாதுரை
	இனம்	திராவிடர்
	முகவரி	95, திருக்கச்சிநம்பி தெரு, ... காஞ்சிபுரம்.
4.	வெளியிடுவோரின்பெயர்...	சி. என். அண்ணாதுரை
	இனம்	திராவிடர்
	முகவரி	95, திருக்கச்சிநம்பி தெரு, காஞ்சிபுரம்.
5.	ஆசிரியரின் பெயர் ...	சி. என். அண்ணாதுரை
	இனம்	திராவிடர்
	முகவரி	95, திருக்கச்சிநம்பி தெரு, காஞ்சிபுரம்.
6.	பத்திரிகையின் உரிமையாளர்களுடையபெயர்களும் முகவரியும் அல்லது பத்திரிகையில் ஒரு சத விகிதத்திற்கு அதிகமான மூலதனம் போட்டுள்ளவர்களின் பெயர்களும்முகவரியும்...	சி. என். அண்ணாதுரை, 95, திருக்கச்சிநம்பி தெரு, காஞ்சிபுரம்.

என் அறிவிற்கும், நம்பிக்கைக்கும் நன்கு தெரிந்த மட்டில், மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்று சி. என். அண்ணாதுரையாகிய நான் அறிவிக்கிறேன்.

4—3—58

(ஒப்பம்) சி. என். அண்ணாதுரை
வெளியிடுவோர்.

அறம் காத்த புலவர்

“வாழி அவன் தன் வளநாடு மகவாய் வளர்க்கும் தாயாகி: ஊழி உய்க்கும் பேருதவி ஒழியாய் வாழி காவேரி” எனச் சிலப்பதிகார ஆசிரியராலும், “கோள் நிலை திரிந்து கோடை நீடினும் தான் நிலை திரியாத் தண்டமிழ் பாவை!” என மணிமேகலை ஆசிரியராலும் அழகாக மொழியப்பட்ட பொன்னி வளம் பெருக்கும் ‘சோற்றால் மடையடைக்கும் சோணாட்டில்’ வெள்ளைக்குடி என்னும் ஊரில் தோன்றியவர் நாகனார் என்னும் புலவர். உழவுப் பணி புரிந்து நாட்டை ஓம்பிய புலவர் பலருள் நாகனாரும் ஒருவர். இவர் அறம் காத்த நல்லறிஞராகப் பின்பு விளங்கினார்.

இவர் வாழ்ந்த காலத்தில் கிள்ளிவளவன் என்ற அரசன் ஈகை, அறிவு, ஊக்கம் ஆகியவற்றில் சிறந்தும், கொடை, கருணை, செங்கோல், குடியோம்பல் ஆகியவற்றில் வல்லவனாயும் சோணாட்டினை அரசோச்சி வந்தனன்.

இவனது நாட்டையும், வீரத்தையும், கொடையினையும் சிறப்பித்துப் பாடிய புலவர் பலர். அவர்களில் தலையாயவர் ஆலூர் மூலங்கிழார். வளவன் நாட்டின் வளத்தை “ஒரு பிடி படியும் சீறிடம், ஏழு களிறு புரக்கும் நாடு கிழவோயே” எனப் பொலிவோடு கூறுகின்றார். ஒரு சிறிய பெண் யானை படுப்பதற்குரிய மிகச் சிறிய நிலத்தில் நெல் விளைத்தால், அந் நெல் பருத்த ஏழு ஆண் யானைகளை ஊட்டிக்காக்கும் என்பது இதன் பொருள். அன்று சோணாட்டின் வளம் அத்தகையதாயிருந்தது. நாடு என்னும் நற்பெயருக்கு ஏற்றதாக வலிவோடும், பொலிவோடும், சீரும், சிறப்பும் பெற்று விளங்கியது வளவனது நாடு.

வளவனோடு பகைமை கொண்டவர்கள் ‘வளவன் எப்பொழுது வருவானோ’ என்று கலங்கி நின்றார்கள். வளவன் உடன்றுநோக்குமிடம் எரிதவழும், அவன் நயந்து நோக்குமிடம் பொன் விளையும், ஞாயிற்றில் நிலவும், திங்களில் வெயிலும் விளைவிக்கும் ஆற்றல், வலிமை படைத்தவன் வளவன் என்று அவனது வீரத்தை புலவர் பாராட்டுகின்றார்.

‘இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல் குலன் உடையான் கண்ணே உள’ என்ற இலக்கியத்திற்கு இலக்கணமாய்க் கொடை வழங்குவதிலும் வளவன் சிறந்து விளங்கினான், செல்விருந்து ஓம்பி வருவிருந்து எதிர்பார்த்து, தன்னை நோக்கி வரும் புலவர், பாணர் முதலியோர்க்கு இல்லை என்னாது வாரி வழங்கும் வள்ளல். இவனது அன்பு உபசரிப்பில் மூழ்கியவர் ஆலத்தூர் கிழார். வளவன் எனக்கு மட்டும் உதவி செய்தவனல்லன். அப்பாணர் அவன் அளித்த பாலும், சோறும் கலந்த உணவை அளவுக்கு மீறி உண்டு அகமும் புறமும் மகிழ்ந்தார். எனவே கீழ்க்காற்றால் வரும் மேகம் பொழிந்த நுண்ணிய பல துளிகளைக் காட்டிலும் அவன் வாழ்வானாக என்று வளவனது கொடைத் தன்மையினைப் புலவர் பாராட்டினார்.

இத்தகைய ஏற்றம் நிறைந்த இவனது நாட்டில் சில ஆண்டுகள் மழையின்மையால் விளையுள் குறைந்தது. இறைவரி செலுத்த இயலாமல் மக்கள் வாடினர். வரி வசூலிக்கும் தண்டல் தலைவர்கள் மக்களைக் கொடுமைப் படுததினர். புலவர் வெள்ளைக்குடி நாகனாரும் பாதிக்கப்பட்டார். மக்கள் இன்னல்களை நீக்க அரண்மனைசென்று கொற்றவனைக் கண்டார் நாகனார். மன்னவனும் புலவரை வரவேற்று உபசரித்தான். நாகனார் வளவனை நோக்கி, “பெரும! அலை நிறைந்த ஆழ்க்கடலைச் சுற்றெல்லையாகவும், விண்ணைமேல் எல்லையாகவும் கொண்டது இவ்வுலகம். இவ்வுலகில் முரசு முழங்குதானை மூவருள்ளும் அரசு எனப்படுவது நினதே. அலங்கு கதிர்க் கனலி நால்வயின் தோன்றினும், இலங்கு கதிர் வெள்ளி தென்புலம் படரினும் காவேரி தன் பாய்ச்சலில் குறையாது. பல கால்வாய்களின் வழி ஓடிக் கரும்புப்பயிர்களை வளர்க்கும் வயல்களில் காற்றில் அசைந்து காணப்படும் கரும்புப் பூக்களின் தொகுதி வெள்ளிய வேல்களின் கூட்டம்போல் காட்சி அளிக்கும். இத்தகைய வளமிக்க காய்த்த செந்நெல்லின் காடு சூழ் காவேரி நாடு நினது நாடே. நீதி வேண்டி வந்த குடிமக்களுக்கு நீதி வழங்குதல் வேண்டும். அப்பொழுது தப்பாது மழை பெய்யும். நினது வெண் கொற்றக்குடை நினக்கு வெயில் மறைக்கப் பிடிக்கப்பட்டதன்று. வருந்திய குடிமக்களின் துயர் துடைக்கவே அது பிடிக்கப் பட்டது. நீ பகைவர்களை வெற்றி கொண்டது உழவர் வயலில் கலப்பைஊன்றிய சாலின் மருங்கே விளைந்த நெல்லின் பயன் ஆகும். மாரி பொய்ப்பினும், அதன் விளைவாக விளைவு குறைந்தாலும், இவைகட்கெல்லாம் காரணம் அரசனே என இவ்வையகம் தூற்றும்.

அரசே! இனியாவது கோள் சொல்வோரின் வெற்றுரைகளை நம்பாது, நடுவு நிலைமையோடு உழவர்களையும், ஏனைய குடிமக்களையும் காக்கவேண்டும்” என்று அறம் கூறினார்.

மக்களின் இன்னல்களைப் புலவர் மூலம் அறிந்த வளவன் வருந்தினான். அமைச்சரை விளித்து மக்களுக்கு வரிவிலக்கு அளித்தான். நாகனாரும் பழஞ் செய்க்கடன் வீடு கொண்டார். “தண்ணீரும் காவிரியே, தார்வேந்தன் சோழனே, மண்ணாவதும் சோழ மண்டலமே” என வாழ்த்திச் சென்றார் அறம் காத்த புலவர் நாகனார்.

அன்று அறம் தவறிய அரசனும், புலவர் நல்லுரைகளைக் கேட்டுத் திருந்தி, மக்கள் துயர் துடைத்தான். ஆனால் இன்றோ...!

—ம. சி. இராமமூர்த்தி.

மன்னிக்க ஆற்றல் படைத்தலே மன்னன் ஆவதற்குரிய பண்பாகும். முடியில் உள்ள சிறந்த பணி, தண்டிப்பதன்று, மன்னித்தலே.

"நீண்ட நேரம்" பேசுக!

(அரங்கண்ணல்)

இப்போதெல்லாம், "நீண்ட நேரம்" பேச ஆரம்பித்துவிட்டாராம் காமராசர்! இருபதாம் நூற்றுண்டின் இணயற்ற அதிசயம் போல, ஏடுகள் வெளியிடுகின்றன இதை !!

சும்மாயிருப்பதே சுகம்—அமைதியாயிருப்பதே அழகு — என்றிருந்தவருக்கு, இப்படியொரு ஆசை எழுந்திருப்பது, பாராட்டப்படவேண்டியதே. பொது மக்களுக்கு, காமராசரைப்பற்றி அறிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படுமல்லவா! ஒரு மாநிலத்தின் முதலமைச்சர், நீண்டகாலம் காங்கிரசில் பணியாற்றியவர், தமிழகத்தின் 'தலைவிதி'யைக் கையில் வைத்திருக்கும் பாக்கியம் பெற்றவர் — மக்களுக்கு விளக்கங்கள் தர முன்வருவதுதான் நல்லது. ஒருவேளை, தவருன பாதையில் சென்றிடும் மக்களைத் தடுத்து நிறுத்தக்கூடுமல்லவா!!

என்ன பேசினுர்? என்னென்ன நன்மைகளைச் செய்ததாகச் சொல்லுகிருர்? தந்த பட்டியல் என்ன! கண்டுபிடித்த தவறுகள் யாவை!! — என்று, அறிந்திடும் ஆசையோடு, அவரது "நீண்ட நேரப் பேச்சு"களை, ஏடுகளில் படித்தோம். ஏக்கமும் துக்கமுமே எழுந்தது!!

இவ்வளவுதானு?—என்பதே, ஏக்கத்துக்குக் காரணம்! துக்கத்துக்குக் காரணம், இவரும் சராசரிகளில் ஒருவராக உள்ளாரே என்பதுதான் !!

சென்ற இடங்கள் தோறும். தி.மு.க-வைப்பற்றி ஒரு பிடி, பிடிக்கிருர். அழகான விளக்கங்களையும், நல்ல வாதங்களையும், முதலமைச்சர் எடுத்துக் காட்டினுல், பொருளுமிருக்கிறது; பயனுமிருக்கிறது. அதுபோன்ற விமர்சனங்களை, விரும்பி வரவேற்பவர்கள்தான் நாம். ஆனுல், முதலமைச்சர், "நீண்டநேரப்பேச்சில்" அந்தப் பகுதிக்கே போகவில்லை! ஏனைய காங்கிரஸ் பிரச்சாரகர்களைப் போலவே, ஏசலையும் சாபத்தையும் வழங்கியிருக்கிருர் நம் மீது !!

நேரு பண்டிதர் வந்தபோது, அவருக்குக் கருப்புக்கொடி காட்டினுேமல்லவா? அதைக் குறிப்பிட்டு, கண்டனமாரிகளைப்பொழிந்திருக்கிருர், ஒவ்வொரு இடத்திலும்! குழப்பம் விளைவிப்பவர்கள்—பலாத்காரவாதிகள்—தூண்டிவிடுகிறவர்கள், என்றெல்லாம் வசைமாரிகளைப் பொழிந்திருக்கிருர்!!

கருப்புக்கொடி காட்ட தி.மு.க. முடிவெடுத்ததும், அரசினர் அதைத் தடுக்க முயன்று தோல்வி பெற்றதும் நாடு அறியும். தலைவர்களைப் பிடித்து அடைத்தார்கள் சிறையில்! பொதுக் கூட்டம் நடத்த அனுமதி மறுத்தார்கள்! சென்னையில் மட்டுமின்றித் தமிழ்நாடு முழுதும் 4700-க்கு மேற்பட்ட தி.மு.க. தொண்டர்களைக் கைது செய்தார்கள்! தடியால் தாக்கினுர்கள்! மவுண்ட்ரோடிலே, இருவரைப் பிணமாக்கினுர்கள்!! கருப்புக் கொடி காட்டுவதைத் தடை செய்ய, இவ்வளவும் செய்தார்கள்.

மக்களோ, அடக்குமுறையால் காரியசாதனை பெறலாம் எனக் கருதிய அரசாங்கத்தின் மூக்கை அறுத்தார்கள்! எமது தலைவர்கள் இல்லாவிடினும், எமது தொண்டர்களைப் பிடித்து அடைத்திடினும், வீடுபுகுந்து இழுத்து அடித்திடினும், கருப்புக் கொடி காட்டவே செய்வோம்—என்று காட்டினர்!!

அரசு, தடுத்தது! மக்கள் அரசைப் பொருட்படுத்தவில்லை!!

காரணம், கருப்புக் கொடி காட்டுவதென, தி.மு.க. எடுத்த முடிவு, மக்களுக்கு நியாயமெனத் தோன்றியது. நேரு பண்டிதர், வாய்க்கு வந்தபடி பேசலாமா — அவருக்கு நமது கண்டனத்தைத் தெரிவிக்கத்தான் வேண்டும்—என எண்ணினர். அதனுல், தி.மு.க. எடுத்த முடிவை, வெற்றிகரமாக்க முயன்றனர்.

ஏனெனில், அதிருப்தியையும் கண்டனத்தையும் காட்டிட, கருப்புக்கொடி பிடித்தல் என்பதுதான் அமைதியான முறை! ஜனநாயகம் ஒப்புக்கொண்டதோர் வழி அது!! கருப்புக் கொடி பிடிப்பதற்குப் பதில், கத்தியை எடுங்கள்—கலவரம் செய்யுங்கள்—அடியுங்கள்—உதையுங்கள்—என்று—தி.மு.க. வேண்டுகோள் விடுத்திருக்குமாயின், நிச்சயம் மக்கள் முன்வரமாட்டார்கள். ஏனெனில், தி.மு. கழகத்தவர், அந்தளவுக்கு பண்பட்டவர்கள்! பலாத்காரத்தையும், ஒவ்வாத நெறியையும் தி.மு.க. நிச்சயம் அனுமதிக்காது — அப்படியொரு நல்ல மாறுதல் ஏற்பட, தான் அரும்பிய நாள்முதல் தி.மு.க. பாடுபட்டு வருகிறது! கண்ணியம் — கடமை — கட்டுப்பாடு என்ற மூன்று தமிழ்ச் சொல்லுக்கும் அரசியலில், முக்கியத்துவம் உண்டுபண்ணியிருப்பது தி.மு.க. தான் !!

இருந்தும், முதலமைச்சர் பழி வீசுகிருர்—பலாத்காரப் பாதையில் செல்பவர்கள் என்கிருர்—வேண்டுமென்றே கலவரம் விளைவிப்பவர்கள் எனும் கருத்து பரப்பப்படுகிறது. இதைச் சொல்லுவதற்காக, "நீண்ட நேரமும்" பேசுகிருர், முதலமைச்சர் !!

* * *

நாற்காலிகள் பறந்தன !
பாட்டில்கள் வீசப்பட்டன !
மேசை எடுத்து எறியப்பட்டது !
மேடையிலிருந்த ஒலிபெருக்கியை
எடுத்து அடித்தார்கள் !!

ஒரு அமைச்சர் பேசப்போன கூட்டத்தில்தான் இத்துணையும் நிகழ்ந்திருக்கிறது. அமைச்சர்

அலறிப் போலீசாரின் உதவியை அழைத்திருக்கிறார் — பொது மக்கள் போலீசாரையும் விடவில்லை, தாக்கியிருக்கிறார்கள்! கடைசியில் ஒண்டி ஒளிய இடம் தேடி ஓடியிருக்கிறார் அமைச்சர்!!

வங்கத்திலா, மராட்டியத்திலா, பஞ்சாபிலா என்று கேட்கத் தோன்றும். ஏனெனில், அங்கெல்லாம், இதுபோல நிகழ்ந்த செய்திகளைப் படித்திருக்கிறோம். தமிழகத்தைப்போல, அரசியல் நெறி, அதிகம் பரவாத இடங்கள் அவை!! ஆனால், இந்த நிகழ்ச்சிகள், எங்கே நடந்தன தெரியுமா? உலகுக்கே ஜனநாயகம் போதிக்கும் நாடு! ஏற்றமும் பண்பாடும் நிரம்பியவர்கள் வாழுகின்றதாகச் சொல்லப்படும் நாடு! அரசியல் நாகரீகத்தினை உலகுக்கே சொல்லிக்கொடுப்பதாகப் போற்றப்படும் நாடு! பிரிட்டனில்தான், இவ்விதமெல்லாம் நிகழ்ந்திருக்கிறது.

பிரிட்டனிலும் ஏதோ ஒரு கிராமத்திலோ, விபரமறியாத மக்கள் வாழும் பட்டி தொட்டியிலோ அல்ல, இவ்வளவும் நிகழ்ந்தது. உலகத்தினர் அனைவரும் உலா விடும் ஊர், அரசியல் அறிஞர்கள் நடமாடிடும் சிங்காரத் திருநகர், தேம்ஸ் நதிக்கரையிலுள்ள இலண்டனிலேயே, இவ்வண்ணம் நிகழ்ந்திருக்கிறது. அமளிக்கு ஆளானவர், இங்கிலாந்தின் 'வீட்டு மந்திரி'யான ஹென்றி ப்ரூக், என்பவர்.

வீட்டு வாடகைகளை, இம்மந்திரி உயர்த்தியிருக்கிறார் அண்மையில்; இதனால், பிரிட்டனிலுள்ள எட்டு இலட்சம் சீமான்களுக்கு இலாபம் குவியும்! ஆனால், வீடுகள் இல்லாது வாடகைக்குக் குடியிருப்பவர்களோ, இச்சட்டத்தால் திண்டாட நேரும்—ஏனெனில், உயர்ந்த வாடகை கொடுக்க முடியாதவர்களை உடனே வெளியேற்றவும் சட்டத்தில் இடமிருக்கிறது!!

இதைப் பொறுத மக்கள், சீமான்களுக்காகச் சட்டம் செய்த அமைச்சரைப் படாதபாடு படுத்தியிருக்கின்றனர் — விலகு! ஓடு! வராதே! — என்று வாயாலும்; அழுகிய முட்டை வீசல், பழத்தை முகத்தில் எறிதல்; காகிதங்களைப் பறக்க விடுதல் போன்றவைகளைச் செயல் மூலமும் காட்டியிருக்கிறார்கள்.

வாடகையை உயர்த்தச் சொல்கிறது! அதன் மூலம் செல்வர்களுக்கு வசதியளித்து, வாழ்க்கை நடத்தப் போராடும் மக்களுக்கு தொல்லைகளை அதிகமாக்குகிறது!! இந்தத் தவறுதலான நடவடிக்கை மக்களை ஆத்திரங் கொள்ளச் செய்திருக்கிறது. ஜனநாயக தத்துவமுணர்ந்த பிரிட்டனிலேயே,

அழுகிய முட்டைகள்
பழத்தால் மோதுதல்
நாற்காலியை எடுத்து அடித்தல்

முதலிய செயல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள் மக்கள்! அரசின் தவறு, அவர்களையே ஆத்திரங் கொள்ளச் செய்திருக்கிறது!!

* * *

காமராசர் அரசு, இதுவரை எத்தனை யெத்தனை தவறுகளைச் செய்திருக்கிறது? மக்களின் எந்தக்கோரிக்கைகளையாவது மதித்ததுண்டோ!!

சகல கட்சிகளும் கோரின தமிழ் நாடு எனப் பெயர் வைக்கும்படி, எல்லையை இழக்காதீர் என வேண்டின.

முதுகுளத்தூர் கோரத்தில் நீதி விசாரணை கோரின. தடியடிகளுக்கு நீதி விசாரணை கோரப்பட்டது.

தவிக்கும் நெசவாளருக்கு வாழ்வளிக்க வேட்டி புடவை ரகங்களைக் கைத்தறிக்கே ஒதுக்கக் கோரும் கோரிக்கையிருக்கிறது.

இலங்கையிலிருந்து வெளியேறும் இன்னல்கள் பற்றி, பேசப்பட்ட வண்ணமே உள்ளது.

என். ஜி. ஓ.-க்கள் குமுறும் நிலையிலேயே உள்ளனர்.

ஆசிரியர்களின் அவல நிலை போக்கப்படவில்லை.

இது போலப் பல! எதில்தான், இவர், நீதியும் நியாயமும் வழங்கினார்? கடந்த கிழமை, இவர் அரசு, நகர சபைகளுக்கு உத்தரவு வேறும் அனுப்பியுள்ளதாம். சாதிப் பெயர்ப் பலகைகளை நீக்கும்படி வற்புறுத்தக் கூடாதெனும் பொருள் தொனிக்கும்படி!!

இவ்வளவு இருந்தும், மக்கள், ஹென்றிபுரூக்கைப் போல, இவர்களை நடத்தவில்லை. அமைதியான முறையில் தமது கண்டனங்களையும், எதிர்ப்புகளையுமே காட்டி வருகிறார்கள். குழப்பமோ, கலவரமோ இல்லாமல், தமது குறைகளை எடுத்துக்கூறி வருகின்றனர். சட்டசபையில், நமது உறுப்பினர்கள் பேசுகிறார்கள்—மக்கள் மன்றத்தில் அரசின் தவறுகளை எடுத்துரைக்கிறார்கள் - அதிருப்தி அதிகமாகும்போது கருப்புக் கொடி காட்டித் தமது எதிர்ப்பினைத் தெரியப்படுத்துகிறார்கள்! அப்படி அமைதியாகக் கொடிபிடிப்போரை இவர் அரசு, கொடுமைப்படுத்தும் போதும், தி. மு. க. - வினர் தமது அறநெறியை விடுத்து அடாத செயலில் செல்லவில்லை—சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கலவரம் செய்த காலிகளையும் கண்டிக்கத் தவறவில்லை, தி. மு. க.

இருந்தும், நாம் ஏதோ ஒரு பயங்கரவாதிகள் போலவும், முகமூடி போட்டு வரும் பூச்சாண்டிகள் போலவும், நாட்டையே வெட்டி எடுத்துக் கொண்டுபோய் வங்காளக் கடலில் போடப் பார்ப்போர் போலவும், பொதுக் கூட்டங்களில் பேசினால் என்ன பொருள்? சுப்ரமணியம், பக்தவத்சலம், ராஜாராம் இவர்கள் தான் இப்படிப் பேசுகிறவர்கள் என்று எண்ணி இருந்தோம்! காமராசரும் அப்படிப்பட்டவர் தான், இதுவரையில் அவர் "நீண்ட நேரம்" பேசக் கிளம்பாததால்தான், அந்த வாடை வீசவில்லையே தவிர, வேறொன்றுமில்லை என்கிற விளக்கமே கிடைக்கிறது!!

முதலமைச்சர், விடாது ஊர் ஊருக்கும் போய் இதுபோல, "நீண்ட நேரம்" பேச வேண்டும் என விரும்புகிறோம். இவர் பேசப் பேசத்தான், மக்களுக்கு, இவர் உருவமும் உள்ளமும் நன்கு தெரியக்கூடும். தமிழ் நாட்டு மக்கள், ஒவ்வொரு நாளும், தி. மு. க.-வின் அரசியல் வளர்ச்சியை உற்றுப் பார்த்து வருகின்றனர். நாட்டுப் பிரிவினையை முன் வைத்து, நாம் தரும் ஆதாரங்களுக்குத் தக்க பதில் காணாமல், தடியா! மடையா! என்பது போல, பழியையும், ஏசலையும் வீச வீச, எங்கே— யாருக்கு—பலம் குறைகிறது, என்பதை நன்றாக உணர்வார்கள் தமிழகத்து மக்கள்.

எனவே, காமராசருக்கு, இப்போது ஏற்பட்டிருக்கும் உற்சாகம் குறையாமல், அவர் "நீண்ட நேரம்" பேசவேண்டுமெனத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

★

2-ம் பக்கத் தொடர்ச்சி

அழிந்துவிடாது' என்று அரசாங்கம் அறிவிக்கின்றது. இதுவரை வாதம் சரியானதுதான் என்றால் அரசினரின் கடமை இந்த ஒரு துறையோடு வேறு துறைகளில் சாதி ஒழியும் முறைகளைக் கூறி அதனைச் செயல்படுத்துவதில் செல்லவேண்டும். ஆனால் 'சென்னையிலே கொலுவிருப்போர் சொல்லிடும் வாதம் வேடிக்கையாகஇருக்கிறது. "இதுவும் ஒரு வழிதான். ஆனால் நாங்கள் இதனை மேற்கொள்ள மாட்டோம். ஏனெனில் இது ஒன்றினால் மட்டும் சாதிஒழிந்துவிடாது" என்று கூறுகின்றனர்.

மற்றதை — மற்ற வழியை— அவர்கள் பின்பற்றும்வரை இந்த ஒரு துறையிலாவது முன்னின்று நகர மன்றங்களின் தீர்மானத்தைச் செயலாக்க இடமளித்திருந்தால் அரசினரின் எண்ணத்திலே குறைசொல்ல இடம் இருக்காது. ஆனாலும் அரசாங்கம் விசித்திரமான விளக்கம் தந்து வேடிக்கையான உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது.

போகவேண்டிய தொலைவு 20-கல். இந்த ஒரு கல் நடந்துவிடுவதனால் மட்டும் அங்கு போய்ச் சேர்ந்துவிட முடியாது. ஆகவே நான் இங்கேயேதான் இருப்பேன் — எழுந்து நடக்க மாட்டேன் என்று ஒருவன் சொன்னால் அது எத்துணை வேடிக்கையாகும்!

இருபது கல்தொலைவையும் ஒரு சேர நடக்க இயலவில்லையாயினும் ஒவ்வொரு கல் தொலைவாகக் கடந்தால்தான் பயணம் முடியும். அதைப்போல் சாதி தொலைய இருக்கும் எத்துணையோ வழிகளில் இதுவும் ஒன்று. இதனை இப்போது மேற்கொள்வோம்— என்று நகர மன்றங்கட்கு அரசாங்கம் ஊக்கம் அளித்திருக்க வேண்டும். ஆனால் அதைச் செய்யத் தவறிவிட்டது இன்றைய அரசு.

இத்தனைக்கும் காங்கிரஸ் கட்சி சாதி ஒழிய வேண்டாம் என்று சொல்லிவிடவில்லை. அவ்வப்போது நேரு பண்டிதர் சாதிக் கொடுமைகளிலிருந்து நாம் விடுபட வேண்டும் என்று முழங்கிய வண்ணம் இருக்கிறார்.

நேரு சொல்வது ஒருபுறம் இருக்கட்டும். காங்கிரஸ்—தமிழ்நாட்டுக் காங்கிரஸ்காரர்கள் தேசியக் கவி என்று போற்றித் துதிக்கும் சுப்பிரமணிய பாரதியார்,

'சாதிகள் இல்லையடி பாப்பா'
'சாதிக் கொடுமைகள் வேண்டாம்'

என்று பாடியிருக்கின்றார்.

தேசிய கௌரவ பாதுகாப்பு மசோதாவின்மீது உரையாற்றுகின்றபோதுகூட,

"சாதிவெறியினால்தான் காந்தியார் கோட்சேயினால் கொல்லப்பட்டார் என்பதும், சாதி வெறியை அடக்க காந்தியார் முயற்சி எடுத்ததுதான் காந்தியாரின் உயிருக்கே ஆபத்தாய் முடிந்தது என்பதும் உலகம் அறிந்த உண்மை."

என்று சாதித் தீமையினை எடுத்துரைக்கப்பட்டது.

ஆகவே இதனை யெல்லாம்" காமராசர் கேள்விப்பட்டாவது இருக்க வேண்டும்.

தமிழ்ப் பண்பாட்டின்படி சாதிகள் இல்லை என்பதும் உலகம் அறிந்த உண்மை.

உண்மையாகவே சாதிகள் ஒழிய வேண்டுமென்பதில் சென்னை அரசாங்கத்திற்கு அக்கறையும் ஆர்வமும் இருக்குமானால், நகர மன்றங்கள் செய்த முடிவை நன்றி தெரிவித்து வரவேற்றிருக்கும். சாதிகள் ஒழிவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று — இன்றியமையாதது — இது போன்ற நல்ல முறைகளை நகர மன்றங்களும், மற்றுமுள்ள பொதுநல நிறுவனங்களும் மேற்கொண்டு இந்த வேண்டாத சாதிகள் ஒழிவதில் சர்க்காருடன் ஒத்துழைக்க முன்வர வேண்டும் என்று உற்சாக மூட்டியிருக்க வேண்டும். ஆனால் காமராசர் சர்க்கார் செய்ததென்ன? "இதனால் எல்லாமா சாதி ஒழிந்துவிடும்" என்று ஏளனம் செய்திருக்கிறது.

சாதிகள் ஒழியவேண்டுமென்பதற்குக் கூறப்படும் காரணங்கள் இன்று நேற்று ஏற்பட்டவை அல்ல. நாட்டில் தோன்றிய ஒவ்வொரு சீர்திருத்த வாதியும் சாதிகள் ஒழிய வேண்டுமென்பதற்கு வேண்டிய காரணங்களைக் கூறி வந்திருக்கின்றனர்.

இவ்வளவு காரணங்கள் இருந்தும் காமராசர் அரசாங்கம் பலகைகளில் சாதிகள் அழியவேண்டாம்; அழகாக எழுதப்படவேண்டும் என்று சொல்லிவிட்டதே என்று திகைத்து அவரைத் தமிழர் அல்ல என்று சொல்லிவிடத் துடிக்கிறீர்களா—அப்படி மட்டும் சொல்லிவிடாதீர்கள்—அவர் ஒரு 'பச்சைத் தமிழர்'!

— மா. கி. தசரதன்

பார்லிமெண்டில் தி. மு. க.

"......தென் ஆப்பிரிக்கா, பர்மா, இலங்கை போன்ற வெளிநாடுகளில் தென்னவர்கள்—குறிப்பாகத் தமிழர்கள் படும் இன்னல்களைப் பற்றியும், அவர்களின் துயர் துடைக்க இவ்வரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றியும் குடியரசுத் தலைவரின் சொற்பொழிவில் ஓர் குறியைக் கூடக் காண முடியவில்லை. உள்ளபடியே இவர்களின் நலத்தில் இவ்வரசாங்கத்திற்கு எள்ளளவேனும் அக்கறை இருக்கிறதா என ஐயுறுகிறேன். இம்மக்கள் டில்லிக்கு நெடுந்தொலைவில் இருக்கும் தென்னகத்தைச் சார்ந்தவர்கள் என்ற ஒரே காரணத்தால் அலட்சியப் படுத்தப்பட்டு விட்டார்கள் என்றுதான் கருத முடியும்."

டில்லி பார்லிமெண்டிலே, அண்மையில் பேசிய நமது உறுப்பினர் தர்மலிங்கம், இவ்வாறு முழக்கமிட்டிருக்கிறார். பாராண்ட பரம்பரை பன்னாடை இந்திக்குப் பணியாது என்றும், தென்னாட்டில் வளர்ந்துள்ள விடுதலை இயக்கம் பற்றியும் அவர் சபையில் எடுத்துரைத்தார்.

மதுரை மாவட்ட
தி. மு. க. 3-வது மாநாடு
மார்ச் 8, 9-ஆம் (சனி, ஞாயிறு) நாட்களில்
பழனி—மொய்தீன்பிச்சை பந்தல்
தாளமுத்து அரங்கில் நடைபெறும்.

தலைவர்: நாஞ்சில் **கி. மனோகரன்** எம். ஏ.

திறப்பாளர்: புரட்சி நடிகர் **எம். ஜி. இராமச்சந்திரன்**

அண்ணாதுரை, நாவலர் நெடுஞ்செழியன்

என். வி. நடராசன்,
ஈ. வெ. கி. சம்பத் எம். பி.,
க. அன்பழகன் எம்.எல்.ஏ.,
மு. கருணாநிதி எம். எல். ஏ.,
வி. பி. இராமன்,
ஏ.கோவிந்தசாமிஎம்.எல்.ஏ.
ப. உ. சண்முகம் எம்.எல்.ஏ.,
ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம். எல். ஏ.,
திருமதி சத்தியவாணிமுத்து எம். எல். ஏ.,
எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ.,
என். எஸ். இளங்கோ
அலமேலு-அப்பாதுரை

டி. கே. சீனிவாசன்,
கே. ஏ. மதியழகன்,
அடிகள் சிவநேசம்,
பழனி - வெங்கிடுசாமி,
அருண்மொழி,
சி. பி. சிற்றரசு,
இரெ. இளம்வழுதி,
இரா. செழியன்,
அ. பொன்னம்பலனார்,
காஞ்சி- கல்யாணசுந்தரம்,
கண்ணதாசன்,
எம். எஸ். இராமசாமி,
ஆர். எஸ். பாண்டியன்
ச. இராசகோபால்

டாக்டர் அருணாசலம்,
எஸ். எஸ். தென்னரசு,
நடிப்பிசைப்புலவர் கே. ஆர். இராமசாமி,
நடிகமணி டி. வி. நாராயணசாமி,
மேடைவலசு சிதம்பரனார்,
சிற்றுளி-சுப்பிரமணியம்,
கே. எச். எம். சுபேர்,
கே. எஸ். சந்தானம்
க. அறிவழகன்
சிறுமிகள் லில்லி, மனுகாந்தி.

மற்றும் பலர் பேசுவார்கள்

இலட்சிய நடிகர் **எஸ். எஸ். இராசேந்திரன்** அவர்கள்
தம் குழுவினருடன் நடிக்கும் நாடகங்கள்

8—3—58 சனி இரவு
"புது வெள்ளம்"

9—3—58 ஞாயிறு இரவு
"மணிமகுடம்"

இரு நாட்களிலும் இசைமுரசு
நாகூர் அனீபா
குழுவினரின்
இன்னிசை விருந்து உண்டு.

இருநாட்களுக்கும்
நுழைவுக் கட்டணம்:—
ரூ. 5, 3, 2,
பெண்களுக்கு அணா 8

குறிப்பு:— மாநாட்டு நிகழ்ச்சிகளை எஸ். எஸ். இராசேந்திரன் அவர்கள் திரைப்படமெடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப் படுத்திக்கொள்கிறோம்.

எஸ். முத்து, வ. கு. தலைவர்.
எஸ். எஸ். இராசேந்திரன், பொருளாளர்.
கா. வெங்கடாசலம், பா. சீனி, தொண்டர்ப்படைத் தலைவர்கள்.

பி. எஸ். சேக்,
தா. ஆவுடையப்பன்,
செயலாளர்கள்.